ஆண்டு மலர்

விலை: ரூ. 2/-
(நன்கொடை)

# இந்து கலா சாரம்

## இந்து சமய திங்கள் வெளியீடு

கௌரவ ஆசிரியர்: திரு. ஆர். வைத்திமாநிதி

மலர்: 2 ★ திருவள்ளுவர் ஆண்டு 2021 தைத் திங்கள் 1 ஆம் நாள் (14 - 01 - 1990) ★ இதழ்: 1



## பொருளடக்கம்

★ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதியின் ஆசிச்செய்தி.

* *

★ நல்லை ஆதின குருமகா சந்நிதானம் முதல்வரின் ஆசிச்செய்தி.

* *

★ நுவரெலியா இலங்காதீஸ்வரர் தேவஸ்தானம் காயத்திரி சித்தர் ஸ்ரீ முருகேசு சுவாமிகளின் ஆசிச்செய்தி

* *

★ ஆசிச் செய்திகள்

* *

★ ஈழமணித்திருநாட்டில்...

* *

★ இந்து மதம்

* *

★ கோவிலும் கும்பாபிசேகமும்

* *

★ வடமேல் மாகாணத்தில்

* *

★ மனித வாழ்வில் சமயமும்......

* *

★ இந்துக்களுக்கு இல்வாழ்க்கை (அரிவையர் அரங்கு)

* *

★ இன்பம் எங்கே (கவிதை)

* *

★ சமய சாதனைகள்

* *

★ சைவ அடியார் ரெங்கநாதபிள்ளை.

* *

★ தைப் பொங்கல்

* *

★ இந்துகலாசாரம் வளர்க! வாழ்க!!

* *

★ வாசகர் வட்டம்

* *

முகவரி: ஆசிரியர்
''இந்து கலாசாரம்''
39/23, நெல்சன் ஒழுங்கை.
கொழும்பு-3

# எம்மைப் பற்றி....

"இந்து கலாசாரம்'' ஆரம்பித்து ஓராண்டு நிறைவு பெறுவதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்துசமய வளர்ச்சியை குறிக்கோளாகக் கொண்டு கொள்ளுப்பிட்டியில் இந்து கலாசாரமன்றம் நிறுவப்பட்டது.

இம் மன்றத்தின் நோக்கங்கள் பின்வருவன:-

- ○ இந்துசமயப் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகள் தோறும் இந்துசமய வகுப்புகள், சமய சொற்பொழிவுகள் நடத்துதல்.
- ○ சமய நூல் நிலையங்களை ஏற்படுத்துதல்.
- ○ சமய நூல்கள் பருவமலர்கள் வெளியிடுதல்.
- ○ உலக இந்துசமய ஆராய்ச்சி நிலையத்துக்கு உதவுதல்.
- ○ இயல், இசை, நாடகம் போன்ற முத்தமிழ் வளர்ச்சிக்கு பாடுபடுதல்.

மேற்கூறிய நோக்கங்களை மன்றம் பின்வருமாறு நிறைவு செய்துள்ளது:-

சமய வகுப்புகள், தமிழ் வகுப்புகள், திருக்குறள் வகுப்புகள், கூட்டுப்பிரார்த்தனைகள், பாரதிபேச்சுப்போட்டிகள், தமிழ் நாடக விழாக்கள், கலைமகள் விழாக்கள், தமிழ் கலாசார நிகழ்ச்சிகள் முதலியனவாகும்.

சமய நூல்கள், பருவமலர்கள் வெளியிடவேண்டும் என்ற நோக்கத்திற்காக "'இந்து கலாசாரம்'' என்னும் இத் திங்கள் இதழ் ஆரம்பிக்கப்பட்டது.

இந்து கலாசார மன்றம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார தமிழ் விவகார முன்னாள் அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை, புடவை கிராமிய தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ். தொண்டமான், முன்னாள் மாகாணசபை உறுப்பினரும் இன்றைய போக்குவரத்து இராஜாங்க அமைச்சருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி முதலியோர் பெருமளவில் உதவி புரிந்துள்ளனர். அமைச்சர் திரு. செல்லச்சாமி மன்றத்தின் வேண்டுகோளுக்கிணங்க கொள்ளுப்பிட்டியிலுள்ள ஒரு தமிழ் பாடசாலைக்கு மாவட்டசபை மூலம் 50,000 ரூபாய் செலவில் ஒரு புதுக்கட்டடம் அமைத்துக்கொடுத்ததை நன்றியோடு குறிப்பிடவேண்டும்.

இந்து கலாசாரம் இதழ் ஆரம்பித்து ஓராண்டு காலத்துள் இந்நாட்டிலுள்ள இந்து சமயத்தலைவர்கள், இந்துசமய ஸ்தாபனங்கள், இந்துப்பெருமக்கள் ஆகியோரின் நன்மதிப்பை பெற்றிருக்கிறது.

குறிப்பாக நல்லை குரு மகா சந்நிதானம், தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானம் நுவரெலியா இலங்காதீஸ்வரர் தேவஸ்தானம், ஜயந்தி நகர் ஸ்ரீ சிவசுப்ரமணியசுவாமி கோவில் அறங்காவலர் வி. சி. வி. தெய்வநாயகம் ஐயா, சிவநெறிப்புரவலர் திரு. சு. கனகராசா ஐயா, பேலியகொடை ஸ்ரீ பூபாலவிநாயகர் ஆலய தேவஸ்தானம், கும்பனித்தெரு அருள்மிகு சிவசுப்ரமணிய சுவாமி அறங்காவலர் சபை, கொழும்பு விவேகானந்தா சபை சைவமுன்னேற்றச் சங்கம், கொழும்புத் தமிழ்ச்சங்கம் இவர்களை குறிப்பிடலாம்.

ஓராண்டுக்குள் இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், இந்தியா, மலேஷியா, மொறிஸியஸ் தீவு, அரபுநாடுகள் போன்ற நாடுகளில் சந்தாதாரர்களை பெற்றிருக்கிறோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்து கலாசார தமிழ் விவகார அமைச்சர் மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்களையும் அவரது திணைக்களத்தையும் குறிப்பிடவேண்டும். அமைச்சரும், திணைக்கள பணிப்பாளர்களும் நமக்கு பெரும் ஆதரவு அளித்துவருகின்றனர். அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறோம்.

இக்குறுகிய காலத்துள் ஒரு சிறிய மன்றம் மேற்கொண்ட முயற்சிக்கு நாம் எதிர்பார்த்ததைவிட பெருமளவு ஆதரவு கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இந்து கலாசாரம் சிறப்பாக நடைபெறுவதற்கு காரணஸ்தர்களை இச் சந்தர்ப்பத்தில் கூறத்தான் வேண்டும். நமது கௌரவ ஆசிரியர் திரு. ஆர். வைத்திமாநிதி, தன்னலம் கருதாத பொதுநல ஊழியர் தொழிலதிபர் திரு. ஆர். விஜயபாலன், பிரதிபலனை எதிர்பாராமல் நமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து ஆலோசனை வழங்கிவருபவர் வீரகேசரி செய்தி ஆசிரியர் (மலையகம்) திரு. வி. தேவராஜ் அவர்களாகும். இந்து கலாசாரம் அண்மைக்காலத்தில் புதியபோக்குடனும் விறுடனும் வெளிவருவதற்கு அவரே காரணம். இத்தனைக்கும் இந்துசமயத்தில் திரு. வி. தேவராஜ் கொண்டுள்ள ஈடுபாடேயாகும்.

இந்து கலாசாரம் இதழுக்கு சமயக்கட்டுரைகள் எழுதிவரும் அன்பர்களுக்கும் அரிவையர் அரங்கை நடத்தும் செல்வி கனகா சாந்திக்கும் விளம்பரங்களை தந்துதவும் சமயப்பற்றுள்ள வர்த்தக பெருமக்களுக்கும், இந்துகலாசாரத்தை அச்சிட்டு உதவும் 'சங்கர் & சன்ஸ்' உரிமையாளருக்கும், அச்சக ஊழியர்களுக்கும் நமது இரு கரங்களையும் கூப்பி வணக்கம் கூறுகிறோம்.

— ஆசிரியர்

உ

ஸ்ரீ சந்த்ரமௌளீஸ்வராய நம

ஸ்ரீசங்கர பகவத்பாதாசார்ய பரம்பரை

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

# ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீ மடம் ஸம்ஸ்தானம் காஞ்சிபுரம்



ஜஹிகம் ஆமுஷ்மிகம் எனப்படும் இம்மையும் மறுமையும் மனிதவாழ்வின் இருபகுதிகளாம். வளங்கொழிக்கச் செய்து மனிதரை தேவநிலைக்கு உயர்த்தி வீடுபேறும் பெறச் செய்வது ஹிந்து மதம்.

தனி மனிதவேறு பாட்டின் முக்கியத்துவத்தையுணர்ந்த அவரவரும் தத்தம் நிலையிலிருந்து உயர்ச்சியை அடைய வழிவகுத்திருப்பதும் இம்மதமேதான்.

ஆகவேதான் வேற்றுமையில் ஒற்றுமை காண்பது ஹிந்துப்பண்பாட்டின் முக்ய அம்சமாகத் திகழ்கின்றது. இந்தத் ஸநாதமானது பெருமையை மறந்திருக்கும் நிலையை அகற்றி, ஹிந்துக்களுக்கு புத்துணர்வு ஊட்டும் பெருநோக்கோடு கொழும்பில் இருந்து வெளிவரும் ''இந்து கலாசாரம்'' திங்கள் வெளியீடு ஓராண்டு தன் பணி முடித்து ஆண்டு மலராக மலர இருப்பது அறிந்து மகிழ்கிறோம்.

இந்த நல்ல முயற்சியில் இதற்கு பெருவெற்றி கிட்ட எல்லாம் வல்ல இறையருள்வதாக என ஆசீர்வதிக்கிறோம்.

அன்புடன்

ஸ்ரீ ஜயேந்திர ஸுவாமிகள்

## செல்வி சந்திரிகா சோமசுந்தரம்

இந்து கலாசாரம சஞ்சிகையின் சிறந்த எழுத்தாளரும் வீரகேசரியின் முன்னாள் பிரதம உதவி ஆசிரியருமான செல்வி சந்திரிகா சோமசுந்தரத்துக்கு சிறந்த நூல்களுக்கான தமிழக



அரசு விருதுகளில் ஒன்று கிடைத்திருக்கிறது. செல்வி சந்திரிகா சோமசுந்தரம் எழுதியுள்ள ''மக்கள் தொடர்பு சாதனமும் மகளிரும்'' என்ற ஆய்வு நூலுக்கு இரண்டாம் பரிசு வழங்கப்பட்டுள்ளது.


செல்வி சந்திரிகா சோமசுந்தரம் பல வருடங்களாக பத்திரிகை உலகில் பிரகாசிக்கும் ஒரு நட்சத்திரம். வீரகேசரி வார வெளியீட்டில் ''தென்னகத்தின் திருக்கோயில்கள்'' என்ற தலைப்பில் அவர் எழுதி வந்த தொடர்கட்டுரைகள் திருத்தலங்களின் பெருமையை உலகறியச் செய்தது. இந்து சமயத்தில் ஆழ்ந்த பற்றும் ஆராய்ச்சித் துறையில் முன்னணியில் நிற்பவர். சமய சம்பந்தமாக பல நூல்கள் எழுதியுள்ளார். பேச்சு வன்மை உள்ளவர்.

இவரது ''மக்கள் தொடர்பு சாதனமும் மகளிரும்'' என்ற நூலுக்கு தமிழக அரசு பரிசு வழங்கியது இலங்கை எழுத்தாளர்களையே பெருமைப் படுத்துவதாயுள்ளது.

செல்வி சந்திரிகா சோமசுந்தரம், இந்து கலாசாரம் சஞ்சிகையில் பல அரிய கட்டுரைகள் எழுதி வந்துள்ளார். செல்வி சந்திரிகா சோமசுந்தரத்துக்கு கிடைத்துள்ள கௌரவத்தை குறித்து நாம் பெருமைப்படுகிறோம். செல்வி சந்திரிகா சோமசுந்தரத்துக்கு நமது வாழ்த்துக்கள். — ஆசிரியர்

## 'மறுமலர்ச்சிக்கு வித்திடவேண்டும்'

இலங்கையின் இனப் பிரச்சினையும் அதனுடன் தொடர்ந்த அமைதியின்மையும் இந்து கலாசார துறைக்கு பெரும் சவாலாக அமைந்து விட்டன. இந்த இக்கட்டான நிலையில் இருந்து இந்து கலாசாரத்தை மீட்டெடுத்து புத்துயிர் கொடுப்பது இதன் பால் அக்கறை ஆர்வம் கொண்ட அனைவரதும் பொறுப்பாகும். அவ்வகையில் காலத்தின் தேவை கருதி இத்துறைக்கு 'இந்து கலா சார இதழ்' ஆற்றிவரும் பங்கு அளப்பரியதாகும். இப்பணி தொடர்ந்து இத்துறையில் ஒரு மறுமலர்ச்சிக்கு வித்திட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.



வ. தேவராஜ் எம். ஏ
செய்தி ஆசிரியர்
(மலையகம்)
வீரகேசரி கொழும்பு.

எமது நல் வாழ்த்துக்கள்

உள்ளூர் விளை பொருள் விற்பனையாளர்

மாலவன்ஸ்

214, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு 11.

MLS

MALAVANS

214, 4th Cross Street, Colombo - 11

23668
27951

# குருமஹா சந்நிதானம் வழங்கிய ஆசியுரை

சிவ நேயச் செல்வர்களே:

இந்து கலாசாரம், சஞ்சிகை தனது முதலாவது ஆண்டை முன்னிட்டு ஓர் சிறப்பு மலர் வெளியிட விருப்பதறிந்து பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம். மிகச் சாலப்பொருத்தமாகும். இந்துகலாசார மன்றம் ஆற்றிவரும் நற்பணிகளையாம் அறிவோம். மெய்ச்சமயமான சைவமும் நற்றமிழும் வளமுற இவர்கள் தம் மாலானமுயற்சிகளை ஊக்கத்தோடு எடுத்து வருவது பாராட்டுக்குரியது. அவ்வரிசையில் இம்மலர் வெளியீடுவதும் ஒன்றாகும். இப்படி ஆன்மீக அடிப்படையில் சைவமக்களாகிய நாம் ஒற்றுமையுடன், ஒன்றுபட்டு உழைப்பின் எமது எதிர் காலம் சிறோங்கும். சந்தேகமே இல்லை.

இம் மன்றத்துக்கு நல்லதொரு கல்விமான் தலைமைதாங்கி, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராகக் கடமையாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

எல்லாம் வல்ல பரம்பொருளின் பாதார விந்தங்களை உளமாரத் தியானித்து எல்லோருக்கும் எமது நல்லாசிகளை வழங்குகிறோம். என்றும் சிவ அன்பு.

ஸ்ரீல ஸ்ரீஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா
நல்லைசந்நிதானம் ஆதீன
முதல்வர்

# தொண்டமான் ஆசிச்செய்தி



இந்துகலாசாரம் என்ற திங்கள் இதழ் ஓராண்டு காலமாக வெளிவந்து இப்போது ஆண்டு மலர் ஒன்று அச்சாகவிருப்பதை அறிந்து அகமகிழ்வெய்துகிறேன்.

இந்து சமயத்தின் பல்வேறு சிறப்பு அம்சங்களையும் மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு இப்படி ஒரு இதழ் வெளிவருவது இன்றியமையாததாகும்.

இந்துசமய மக்கள், குறிப்பாகத் தோட்டப் பகுதிகளில், புதிய தாக்கங்கள் பலவற்றை இப்போது சமாளிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். வெளிநாட்டு முதலீடுகள் அவர்களைப் பல்வேறு திசைகளில் கவர்ந்திழுக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றன. இந்த சந்தர்ப்பத்தில் இந்து சமயத்தின் மேன்மையை அவர்களுக்கு எடுத்துரைத்து அவர்கள் சபலமடையாமல் காப்பது இந்து கலாசாரம் போன்ற இதழ்களின் கடமையாகும். இப்படியான நற்பணியை இந்து கலாசாரம் செய்யவேண்டுமென வாழ்த்துகிறேன்.

எஸ். தொண்டமான்
புடவை, கிராமிய தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சர்.

# அகமகிழ்வெய்துகிறேன்



"இந்துகலாசாரம்" சஞ்சிகை கடந்த ஓராண்டு காலமாக கலாசாரம், ஆன்மீகம், பக்தி போன்ற பல அரிய நற்கருத்துக்களைக் கொண்டு மக்களினத்திற்கு பயன்படக் கூடியவகையில் மகத்தான சேவையாற்றி வருவது பாராட்டுக்குரியது.

"இந்துகலாசாரம்" சிறுற்ற நிலையில் சிறப்புப் பெற்று பிரகாசிக்கவும் உலகெலாம் இந்து மக்கள் அனைவரும் படித்து பயன்பெற வழிகாட்டும் சஞ்சிகையாக, மலர எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ காயத்திரி தேவியை பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி

காயத்திரி சித்த சுவாமிஜி
ஆர். கே. முருகேசு சுவாமிகள்
(உலக ஆன்மீக அரசாங்க நீதிபதி) இலங்காதீஸ்வரர்
ஆலயம், நுவரெலியா.

# பெருமகிழ்ச்சியடைகிறேன்



"இந்துக்களின் கலாசாரம் தொன்மையும் புனிதமும் கொண்டது. இதன் தனித்தன்மையைக் கொண்டு பணியாற்றி வரும் இந்து கலாசாரம் இந்துசமய திங்கள் இதழானது கால நீரோட்டத்தில் எதிர்நீச்சல் அடித்து தன் பணியை செவ்வனே செய்து வருவது பாராட்டத்தக்கது. ஒவ்வொரு இதழும் சிறப்பம்சங்கள் கொண்டு விளங்குவதோடு இந்து சமய வளர்ச்சி கருதி செயலாற்றுவது எல்லோராலும் விரும்பத்தக்கதொன்று.

இந்தச் சூழ்நிலையில் ஆண்டு மலர் வெளியிடவிருப்பது அறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றேன். சமய உணர்வுகளையும் அதன் தொன்மையையும் வெளிப்படுத்தி போதும் பல புதிய அம்சங்களை வருங்காலத்தில் இந்துகலாசார இதழ் தாங்கி வரவேண்டும் என்பதே என் அவா. பல்லாண்டு காலம், இந்து மக்களுக்கு தன் ஆலான கருத்துக்களையும், புதிய கண்ணோட்டங்களையும் செலுத்த பாடுபட வேண்டுமென இந்நன்நாளில் இதன் நிருவாகஸ்தர்களை கேட்டுக்கொள்வதோடு, இப்பணி பெரும் தொடரவென இதயபூர்வ நல்வாசிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பி. பி. தேவராஜ்
இந்துசமய, கலாசார, தமிழ் அலுவல்கள்
இராஜாங்க அமைச்சர்.

# திருவருளின் ஆசியுண்டு



"மனிதன் வாழும் போது தனக்கென வாழாது பிறருக்காக வாழவேண்டும் அப்போதுதான் மனிதப் பிறவியின் மகத்துவத்தை உணர முடியும்'' என்று இந்துசமயப் போதனை உணர்த்துகின்றது. இந்த வகையில் ''இந்து கலாசாரம்'' என்னும் இந்துசமய திங்கள் வெளியீடு இன்றைய நெருக்கடியான சூழ்நிலையிலும்கூட தளராது விறுநடை போட்டு வருவது மிகவும் பெருமைக்குரியது. ஒவ்வொரு இதழிலும் புதுமைகளையும், புனிதத்துவத்தையும்பேணி நற்பணி ஆற்றும் தன்மையால் இந்து கலாசார பாரம்பரியத்தை உள்ளடக்கி தொண்டாற்றும் இதழாக மிளிர்கின்றது. என்றால் மிகையாகாது.

இத்தகைய ஆன்மீக இதழ் ஓராண்டு நிறைவு செய்து அதையொட்டி சிறப்புமலர் வெளியிடுவது மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. இப்பணி மேலும் தொடர வாழ்த்துவதோடு எல்லாம்வல்ல திருவருளின் ஆசிகளை வேண்டி அமைகின்றேன்.

ஆ. பாஸ்கரதாஸ்
பணிப்பாளர்
இந்துசமய, கலாசார
அலுவல்கள் திணைக்களம்

# வாழ்க வழர்க



பேனா வீரனின் கூரிய வாளைவிட எழுத்தாளனின் பேனா சக்தி வாய்ந்தது என்ற பழமொழி நனவான நூற்றாண்டு இது. தமிழன் அல்லலுறுகின்ற இந்த சிக்கலான வேளையில் அவனுக்கு துணைவரக்கூடியது மதமும் கலாசாரமும் மட்டுமே. இதை கட்டிப் பேணுகின்றது 'இந்துகலாசாரம்' மாத இதழ் கையையும் காலையும் மாத்திரம் அசைத்துக்கொண்டிருந்த குழந்தை இவ்வாண்டு தவழும் நடக்கும். தன்னலமற்ற இந்தப் பணியிலே ஈடுபட்டுள்ள அனைவருக்கும் என் வாழ்த்துக்கள். இப்பணி பல்லாண்டு வாழ்க வளர்க!

தெ. ஈஸ்வரன்

# இந்துப் பணி தொடரட்டும்



இந்து சமயத்தின் பெருமைகளையும் அறநெறிகளையும் எழுதி வரும் ஒரேயொரு பத்திரிகையான 'இந்து சாதனம்' ஏறக்குறைய நூறு வருடங்களாக அச்சிடப்பட்டு வருகிறது. இந்து சாதனத்திறகுப் பிறகு இந்துசமய நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டு எழுதப்பட்ட பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் பல தோன்றி மறைந்துவிட்டன;

கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றத்தினர் கடந்த ஒன்பது ஆண்டுகளாக பல்வேறுபட்ட இந்து சமய அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு சமயத்தையும், சமூகத்தையும் இணைத்து செயற்பட்டு வரும் சிறப்புமிக்க தொண்டுகள் பாராட்டுக்குரியனவாகும். 'இந்து கலாசாரம்' திங்கள் இதழின் ஓராண்டு வெளியீட்டு விழா சிறப்புற இடம்பெற வேண்டுமென வாழ்த்துவதுடன், 'இந்து கலாசாரம்' இதழின் பணி மூலம் இந்துக்கள் யாபேரும், சாந்தியும், சமாதானமும் பெற்று பயனடைய வேண்டுமென நல்லாசி கூறுகின்றேன் 'இந்து சாதனம்' போன்று இந்து கலாச்சாரமும் நூறு வருடகாலம் வெளிவரவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

எஸ். சி. மாணிக்கவாசகர்,
செயலாளர்.

இந்துசமய, இந்துகலாசார,
தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு
அலுவலகம்.

# ஆல்போல் தழைத்து



எழுத்துப்பணிமிக உன்னதமானது. புனிதமானது சமுதாயத்தை வளப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. ''வாள்முனையிலும் பேனு வலிமையுடைத்து'' என்பது வரலாற்றுண்மை.

தமிழ் மக்களின் பண்பாடு அவர்களின் கலைகளிலும், இலக்கியத்திலுமே தங்கியுள்ளது. இலங்கையில் கலைகளையும் இலக்கியத்தையும் வளர்க்கும் நல்ல சஞ்சிகைகளும் செய்தித் தாள்களும் மிகக் குறைவாகவே உள்ளன.

உள்ளத் தெளிவுடனும், மாசற்ற சிந்தையுடனும் உயர்ந்த எண்ணங்களையும் புனிதமான கருத்துக்களையும் எதிர்கால சமுதாய நல்வாழ்வின் இலட்சியத்திற்கு எழுதியுதவும் ஊடகமாக உங்கள் வெளியீடு உதவுகின்றது.

சைவசமயத்தைப் பேணுவதும் பாதுகாப்பதும் பரப்புவதுமாகவே வரும் தங்கள் இந்துகலாசாரம் என்னும் இந்துசமய வெளியீடு இதழ் சிறப்புடன் மேலும் மேலும் தன் பணியைத் தொடர்ந்து ''ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்ற வேண்டும்'' என இறை ஆசியை வேண்டி வாழ்துகின்றேன்.

சாந்தி திருநாவுக்கரசன்
பிரதிப்பணிப்பாளர்
இந்துசமய, கலாசார
அலுவல்கள் திணைக்களம்.

# திருப்பணி தொடரட்டும்



ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்ஜோதியாக இறைவனை வழிபட்டு வருவது இந்துகலாசாரம். மனிதன் தோன்றிய காலந்தொட்டு தனக்கு அப்பாற்பட்டதும் சக்திக்கு மீறியதுமான ஒன்றை அனுபவத்தில் அறிந்து கொண்டான். அதனை அறிய முயன்றானோ, இல்லையோ, அதனை உணர மட்டும் அவன் தவறியதில்லை. அந்த உணர்வின் முதிர்ச்சியே பரம்பொருள். ஆதியில் 'சொல்' தான் இருந்தது என்கிறது விவிலிய நூல். அந்தச் சொல்லோடு ஒலியையும் கூட்டி 'ஓம்' என்ற பிரணவ மந்திரம் ஏழிசையாகவும், இசைப்பயனாகவும் இறைவனைக் கண்டது இந்துகலாசாரம் நாதப் பிரம்மம் என்று இறைவனைப் போற்றிப் புகழ்வது இந்துகலாசாரம். மனிதக் குரலின் ரீங்காரமும் வண்டுகளின் ஐங்காரமும் உலக ஒலிகள் அனைத்தையும் 'ஓம்' காரமென்ற பிரணவ ஓசையின் அடக்கமே என்கிறது இந்துகலாசாரம். பண்பாடியே அமரநிலை எய்தும் பண்பாட்டையும் கொண்டது இந்து கலாசாரமாகும்.

இறைவனின் வடிவங்கள் அனைத்துமே "இசை" ஆதாரவடிவமாகிறது. கலைமகளுக்கு வீணையும், பரந்தாமனுக்கு புல்லாங்குழலும், நந்திக்கு மத்தளமும் நாரதருக்கு தும்புருவும், நடனமாடும் நடராசரையும் இந்து கலாசாரம் எடுத்துக்காட்டுகிறது. இறைவனைக் கண்ட ஞானிகள், நாயன்மார்களில் ஒருவராகிய அப்பர் சுவாமிகள் பக்திமேலிட்டால்,

"கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்" என மனம்

புல்லரிக்கிறார். பரம்பொருளாகிய இறைவனைப் பக்தி சிரத்தையுடன் வணங்கி வந்தால் லௌகீக பற்றுக்கள் இற்று முக்தியைப் பெறலாம் என்கிறது இந்து கலாசாரம். மேலும் "அவனருளாலே அவன் தாழ் வணங்கும்" தத்துவங்கள் நிறைந்த பண்புகளைக் கொண்டது இந்துகலாசாரம்

ஈஸ்வர லீலைகள் பற்றிய விருத்தாந்தங்களைப் புராணங்களும் இதிகாசங்களும் அழகாக எடுத்துக்காட்டுகின்றன. திரிகால ஞானிகளான எமது பெரியோர்கள் வாழ்க்கைத் தத்துவத்தை தத்துவரீதியில் விளக்கியதோடு அத்தத்துவங்களை கடவுளின் திருஅவதாரங்களை திருவிளையாடலுக்குப் பின்னல் வைத்து சுவை மிகுந்த பக்தியூட்டும் கருத்தோவியங்களைச் செய்து அருளியிருப்பது இந்துகலாசாரத்துக்கு உயிரூட்டுவதாகும்.

இத்தனை சிறப்புமிக்க இந்துகலாசாரப் பண்பாட்டினை இளைய தலைமுறையினர், அறியாதார் அறியவும், அறிந்தவர் அறிவைப் பெருக்கவும் அறிய விரும்புவோர் அறிவை வளர்க்கவும் இன்று இலங்கையில் ஒருசில பத்திரிகைகளே வெளிவருகின்றன. அவற்றுள் ஒன்று 'இந்துகலாசாரம்'. மக்கள் சேவையே மகேசன் சேவை என பல இடர்களுக்கு மத்தியிலும் தளராது திருப்பணி செய்யும் 'இந்து கலாசாரம்' ஓராண்டுத் திருப்பணியை நிறைவு செய்து மலர் ஒன்று வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இத் தெய்வத் திருப்பணி மென்மேலும் சிறப்புற்றுத் தொடரட்டும்!

வி. ஏ. திருஞானசுந்தரம்
தமிழ்ச் சேவைப் பணிப்பாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

# தெய்வீக திருப்பணி



இந்துமதம் இயற்கையோடு இணைந்து வழிபாட்டினைக் கொண்டது. இத்தன்மையையே இதனை இன்னும் உலகனாவியது உயிர்த் துடிப்புடையதும் என்றுமுள்ளதாகவும் விளங்கச் செய்துள்ளது. நம் தாய்த் திருநாட்டிலும் பண்டு தொட்டு இந்து மதமும் இந்து கலாசாரமும் சிரும் சிறப்புடன் ஓங்கி வளர்ந்து வந்துள்ளமையினை சரித்திரத்தின் வரிகள் சான்று பகருகின்றன. அன்று அப்புனித பணியினை மகான்களும், அனுபூதிமான்களும் அப்பழுக்கின்றி ஆற்றி வந்தனர். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு வாழ வழிகாட்டும் இத் தெய்வீகத் திருப்பணியில் சம காலத்தில் நம் மத்தியில் வாழும்பெரியோர் பலர் ஈடுபட்டு உழைப்பது மகிழ்ச்சிக்குரியது மட்டுமன்றி நிர்தாட்சணியமான காலத்தின் தேவையுமாகும். பல்வேறு எரியும் பிரச்சனைகளுக்கு மத்தியில் இந்து கலாசாரம் என்னும் இதழை நடத்திவருவது பாராட்டுக்குரியது. இந்து கலாச்சார இதழ் ஆக்கபூர்வமான பணியினைச் செய்து இன்று தனது ஓராண்டு நிறைவைக் கொண்டாடுவது பாராட்டுக்குரியது. இதன் கௌரவ ஆசிரியர் திரு. வைத்திமாநிதி ஆசிரியர் திரு ஏ. எம். துரைசாமி மற்றும் ஆசிரிய குழுவினர் அனைவருமே பாராட்டத்தக்கவர்கள்.

இந்து கலாசார இதழ் தொடர்ந்து பிரசுரமாகி நற்பணியாற்ற எல்லாம் வல்லஇறைவனைப்பிரார்த்திக்கின்றேன்.

இவ்வண்ணம் அன்புள்ள,
வி. மன்மதன்,
உதவிப்பணிப்பாளர்,
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.

# கோவிலும் கும்பாபிஷேகமும்

திருக் கோயில்கள் சமய வழக்கிலே மிக உன்னதமான இடத்தைப் பெறுகின்றன. அவற்றின் ஒவ்வொரு பகுதியும் சமயத் தத்துவத்தின் விளக்கமாகவே அமைகின்றன. திருக்கோயிலைச் சுற்றி அமைந்திருக்கும் மூன்று திரு வீதிகள் மூவகைச் சரீரங்களை உணர்த்துவன.

அவையே ஐந்தாக இருப்பின் மூவகைச் சரீரங்களையும் ஆக்கும் ஐந்து கோசங்களைக் குறிக்கும். திருக்கோயில்களில் காணப்படும் இறைவனின் திருவடிவம் நந்தியும் பலிபீடமும் முப்பொருள் உண்மையை உணர்த்துவன. இறைவன் திருவடிவம்-பதி, நந்தி -பசு பலிபீடம் - பாசம் இவற்றுள் பலிபீடம் பத்திரலிங்கம் என்றே சிறப்பிக்கப்படுகின்றது. பத்திரலிங்கம் என்பதற்கு மங்கலத்தை உண்டாக்கும் லிங்கம் எனப் பொருள். இங்கும் பாச நீக்கமே மங்கலம்.

,,ஆய பதிதான் அருட்
சிவ லிங்கமாம்
ஆய பசு மடலே றனை
நிற்கும்
ஆய பலி பீடம் ஆகு
நற் பாசமாம்
ஆய அரநிலை ஆய்ந்து
கொள்வார்கட்கே''

எனவரும் திருமந்திரப் பாடலால் இதனை உணர்ந்து கொள்ளலாம்.

திருக்கோயில்களில் நடைபெறும் உற்சவங்களும் இறைவனின் ஐந்தொழில் விளக்கங்களாகவே அமைகின்றன என்பர். உத்- மேலான சவம் ஐந்தொழில் என்பதுதான் உற்சவம் என்பதற்குப் பொருள். உற்சவ காலத்திலே கொடியேற்றம் வரை முன்னகிரியைகள் படைத்தலையும் வாகனத் திருவிழாக்கள் காத்தல் தொழிலையும் தேர்திருவிழா அழித்தலையும் மௌனோற்சவம் மறைத்தலையும் தீர்த்தம் அருளையும் குறிக்கும், எனச் சமய அறிஞர் கூறுவர். இத்தகைய திருவிழாக்களையே சமய வளக்கில் சால்வ தீட்சைஎனக்கூறுவதோடு தீட்சை பெறுதவர்களும் பிறரும் பிற உயிர்களும் இவ்விழாக்களைக் காணுவதே தீட்சை என்ற பொருளிலேயே இவ்வாறு கூறப்படுகின்றது.

திருக்கோயில்கள் இந்த அளவு சிறப்புப் பெறுவதற்கு காரணம் அங்கு எழுந்தருளியிருக்கின்றதெய்வத திருவுருவங்களே ஆகும் கல்லினாலும் செம்பு முதலான உலோகங்களாலும் செய்யப்பட்ட திருவுருவங்கள் விதிப்படி செய்யப்பட்டவை. அத்துடன் அடியார்கள் செய்யும் வழிபாட்டை ஏற்று அருள் புரிவதற்காகவே சிறப்பாகப் பிரதிஸ்டை செய்யப்பட்டவை. திருவுருவங்களுக்கு வேதாகமங்களில் சொல்லப்பட்ட மந்திர உருவம் தருதலே பிரதிட்டை என்ற கிரியையின் அடிப்படைத்தத்துவமாகும். இதில் ஐந்து முக்கிய பகுதிகள் உண்டு. நயன் உன்மீலனம் விக்கிரக சுத்தி, நியாசம் ஆவாகனம், குடமுழுக்கு என அவை அழைக்கப்படுகின்றது.

நயன் உன்மீலனம் என்பது கண் திறத்தல் எனப்படும். வாஸ்து சாந்தி, அங்குராப்பணம் இரட்சாபந்தனம் முதலிய கிரியைகள் ஆன பின்பு இக்கிரியைகள் செய்யப்படும். கண்களைச் செய்து அவற்றிலே கிரியா, ஞான, இச்சா சக்திகளை முறைப்படி எழுந்தருளிச் செய்வதே இக்கிரியையின் அடிப்படை.

விக்கிரகசுத்தி என்பது அவ்விக்கிரகத்தை முறைப்படி அபிஷேகம் செய்து தண்ணீரில் வைத்தலாகும். பின்னர் இவ்விக்கிரகத்திலே அத்து வாக்களையும் மந்திரங்களையும் அட்சரங்களையும் நியமித்து இறைவனுக்கு உரிய வடிவமாக்கி அதிலே இறைவனை அல்லது இறவியை எழுந்தருளச் செய்தல் நியாசம் ஆகும்.

இதன் பின்னர் கும்பம் வைத்து முறைப்படி பூசை செய்து கும்பத்திலுள்ள மந்திரம் நியாசங்களை விக்கிரகத்திலே சேர்த்துத் தெய்வத்தை ஆவாகனம் செய்வர். இப்படிச்செய்த பின்னர் கும்பத்தை மூர்த்தியில் அபிஷேகம் செய்தல் குடமுழுக்கு எனப்படும். இவ்வாறு பிரதிஷ்டை நடைபெறும் நாள் கும்பாபிஷேகம் எனப்போற்றப் படுகின்றது.

திருக்கோயில்களை ஆகம முறைப்படி ஏற்படுத்தி அவற்றில் திருவருட்பிரகாசம் நிறையச் செய்யும் விழாவே குடமுழுக்கு விழா அல்லது கும்பாபிஷேகம் விழா எனக் கூறுவர். முறைப்படி செய்யப்படும் குடமுழுக்கு விழாக்களாலே ஆலயங்களில் அருட்சக்தி பொங்கி பிரவகித்து நிற்கும் கும்பாபிஷேகம குடநீராட்டு பெருஞ்சாந்தி என்பன குடமுழுக்கின் வேறு பெயர்களாகும்.

கும்பத்திலுள்ள புனித நீரைக் குறிப்பிட்ட நாளிலும் புனித நேரத்திலும் அபிஷேகம் செய்வதா

**எஸ், தெய்வநாயகம்**

லேயே இவ்விழாவிற்குக் கும்பாபிஷேக விழா என்று பெயர் பெறுகின்றது.

திருக்கோயிலின் கோபுரம், விமானம் ஆகியவற்றின் மீதும் இளநீர் தெளிக்கப்படும் இறைவன் முயற்சியில் மங்களமான முடிவாகவே இவ்விழா அமைகின்றதெனலாம்.

இக்குடமுழுக்கு விழா இருசமயங்களில் அமையும். ஒரு திருக்கோயில் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் இது அமையலாம். அன்றேல் அது புதுப்பிக்கப் படும்போதும் இவ்விழா நடைபெறலாம்.

ஒருமாமாங்க காலமான பன்னிரெண்டு ஆண்டுகளுக்குஒரு முறை இவ்விழா நடப்பதுமிக மிகச்சிறப்பானது.

திருக்கோயில்களே இறைவன் எழுந்தருளி இருக்கும் இடங்கள் எனவே அவற்றுக்கு எக்குற்றமும் நேராமல் பார்த்துக்கொள்வது இன்றியமையாதது. ஆலய விமானங்களும் கட்டிடங்களும் பழுதடைதல் திருவுருவங்கள் பின்னடைதல் அஷ்டபந்தனம் இல்லாது போதல முதலியன திருக்கோயில்களுக்கு ஏற்படும் குற்றங்கள். இவற்றையெல்லாம் நீக்கித் திருக்கோயில்களைப் புனரமைத்தல் புண்ணியங்களில் எல்லாம் பெரும் புண்ணியம் ஆகும். புதிதாக ஒன்றை செய்வதை பார்க்கிலும் இத்தகைய புனர்நிர்மாணம் செய்தல் ஆயிரமடங்கு புண்ணியமுடையது எனச் சமய நூல்கள் கூறுகின்றன. இவ்வாறு திருக்கோயில்களுக்கு ஏற்படும் குறைகளைத் திருப்பணி மூலம் நீக்கி குடமுழுக்கு விழாவையும் நடத்தும் போது திருவுருவங்களில் தெய்வ சாந்நித்தியம் நீடித்து நிற்க வழியேற்படுகின்றது. எனவே இறைவன் திருவருள் குறைவின்றிப் பொலிய வகுத்தளிக்கப்பட்ட கிரியைகளின் தொகுதியே குடமுழுக்கு பெருவிழா இல்லாது கும்பாபிஷேக விழா அமைகின்றது எனலாம்.

**கும்பாபிஷேகம் என்பது:**

பதி விளக்கம் பெற்று மூர்த்திகள் இருக்கும் இடங்களைப புதுபிககப்பாகும் போது அவற்றை அப்புறப் படுததனேரும் முறைபபடி அவற்றை அப்புறப்படுத்தி தெய்வசாந்நித்தியத்தோடு மறுபடியும் அவற்றை உரிய இடத்தில் நிறுவுவதே குடமுழுக்கு விழாவின் அடிப்படை. முதலில் திருக்கோயில்களில் உள்ள மூர்த்தியின் சாந்நித்தியத்தைக் கும்பத்தில எழுந்தருளச் செய்வர். கும்பம என்பது இறைவனுடைய வடிவமேயாகும். கும்பத்தை உடலாகவும் சிவந்த நிறம் ஏறப்பூசிய மண்ணைக்குருதியாகவும் கும்பம் ஆக்கப்பட்ட பொருளை மாமிசமாகவும் சுற்றப்பட்ட ஆடையைத்தோலாகவும் நிறைக்கப்பட்ட நீரை நிணமாகவும் தருப்பையை எலும்பாகவும் சுற்றப்

(5ஆம் பக்கம் பார்க்க)

# சமய சாதனைகள்

சாதனை இன்றேல் எதுவும் சாத்தியமில்லை. சாதனை செய்பவன் சாதகன் என்று அழைக்கப் பெறுகின்றான். புறச்சாதனை அகச்சாதனை என இருவகை உண்டு. தேகத்தோடு சம்பந்தமானவை எல்லாம் புறச்சாதனைகளாகும். உள்ளத்தோடு சம்பந்தமானவை எல்லாம் அகச்சாதனைகள்.

புறச்சாதனைகளில் வெற்றி பெறுபவர்களுடைய பெயர்கள் 'ஸ்கின்னேர்ஸ்' புத்தகத்தில் இடம் பெறுகின்றன. உடலுள்ளே இருப்பது உள்ளம். உள்ளத்தினுள்ளே இருப்பது ஆத்மா. ஆத்மாவினுள்ளே இருப்பது பரமாத்மா.

பரமாத்மாதான ஆத்மாவை இயக்குகிறது. உடலும் உள்ளமும் ஆத்மாவின் கருவிகள். நாம் ஆத்மாவுக்குக் கொடுக்கவேண்டிய முக்கியத்துவத்தை உடலுக்கும் உள்ளத்துக்கும் கொடுத்து வருகின்றோம். இதனால் தேகமே ஆத்மா என்று நினைந்து வாழ்கிறோம்.

ஆத்மா குடியிருக்கும் வீடு உடம்பு. உயிர்சுகமாக வாழ்வதற்கேற்ற அளவில் உடம்பை யாவரும் பேண வேண்டும். அதைவிடுத்து ஆத்மாவைப் பற்றிக் கனவிலும் சிந்தியாது உடலையே சிந்தித்து அதற்காக மாத்திரம் வாழ்வதால் வாழ்க்கையின் குறிக்கோள் நிறைவேறாது.

வாழ்க்கையின் குறிக்கோள் இறைவன் திருவடி. உலகிலுள்ள உயிர்கள் எல்லாம் இறைவனது திருவடியை நோக்கியே யாத்திரை செய்கின்றன. இதனால் திருவடியாத்திரைக்காரர் என்ற பெயர் நமக்கு உண்டு. காசிக்குச் செல்பவர்கள் காசியாத்திரிகர் என்றும் கதிர்காமத்திற்குச் செல்பவர்கள் கதிர்காமயாத்திரிகர் என்றும் அழைக்கப்படுதல் போல இறைவன் திருவடியை நோக்கி யாத்திரை செய்பவர் எல்லாரும் திருவடி யாத்திரைக்காரர் என்ற பெயரைப்பெறுகின்றனர்.

உயிர்தான் இறைவன் திருவடியை நோக்கி யாத்திரை செய்கின்றது. உயிரின் திருவடியாத்திரையில் உடம்பு என்பது உயிரின் தங்குமடமாகும். புல், பூண்டு, புழு, மரம், கல், மனிதர், பேய், கணங்கள், அசுரர், முனிவர், தேவர் என்று சொல்லப்படுகின்ற பலவிதமான தங்குமடங்களில் தங்கி இப்போதிருக்கும் உடம்பிற்கு வந்துள்ளது.

ஆத்ம ஜோதி
நா. முத்தையா

நாம் எல்லாரும் திருவடி யாத்திரைக்காரர் என்ற உணர்வைப் பெற்றுவிட்டால் எமக்குள்ளே சாதி, மத, நிற வேறுபாடுகள் எவையுமே இருக்க முடியாது. உலகின் துன்ப நிலைக்கு முக்கியகாரணம் நாம் நம்மை யாரென்று அறியாமையாகும். தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான் என்பது ஒரு பழமொழி. தன்னை அறியக் கேடொன்றுமில்லை என்றும் கூறுவார்கள்.

தன்னை அறிதல் எப்படி? நான் இந்த உடல் அல்ல; நான் இந்த உள்ளமல்ல என்று என்று நேதி செய்து கடைசியில் எஞ்சி நிற்கும் ஆத்மாவை அறிதல் வேண்டும். ரமண மகரிஷிகளின் முக்கிய போதனை நான் யார்? என்று ஒருவன் தன்னை விசாரித்தலாகும். ரமணமகரிஷிகளின் சாதனை முறை அதுவாகும்.

கலியுகத்தில் கடவுளைக் காண்பதற்கு நாமசங்கீர்த்தனம்ஒன்றே வழிஎன்பதை நமக்கு முன்தோன்றி வழி காட்டியமகான்கள்கூறியுள்ளார்கள். கலியுகம் பிறந்த போது இரு பெருந்தலைவர்கள் தலைமையில் இரு பெருங்கூட்டங்கள் நடைபெற்றன. ஒரு கூட்டத்திற்கு கிருஷ்ணபரமாத்மாவும் மற்றையதிற்கு வியாச முனிவரும் தலைமை தாங்கினர். இரு கூட்டங்களிலும் பார்வையாளர்களாக விளங்கியவர்கள் முனிவர்கள். இரு கூட்டங்களிலும் ஒரே பிரச்சினைதான் தலைதூக்கி நின்றது.

'கலியுகம் பிறந்துவிட்டதே, அதர்மம் தலைவிரித்து ஆடுமே, அக்கலியின் கொடுமையை எப்படி நாம் சமாளிப்பது என்பதுதான் அவர்களுடைய பிரச்சினையாகும் இரு தலைவர்களும் ஒரே கருத்தையே கூறியுள்ளனர்.

'கலியுகத்தில் கடவுளைக் காண நாமசங்கீர்த்தனம்' ஒன்றே வழி என்பதுதான் அவர்கள் இருவருடைய முடிவுமாகும் நாம் செய்யும் சமயசாதனைகள் எல்லாம் மனத்தைப் பரிசுத்தப்படுத்துதலிலும் மனத்தை ஒருமைப்படுத்துதலிலுமே தங்கி உள்ளன.

வள்ளுவர் இதனை 'மனத்துக்கண் மாசு இலனாதல் அனைத்து அறன்' என்று கூறுகின்றார். மனதில் கெட்ட நோக்கமில்லாமல் செய்கிறநல்ல காரியம்தான் அறம். அதுஎவ்வளவு சிறியதாயினும் பாதகமில்லை. ஆனால் மனதில் ஒரு கெட்ட நோக்கத்தை வைத்துக்கொண்டு எவ்வளவு பெரிய தர்மத்தைச் செய்தாலும் அது வெறும் ஆடம்பரத்துக்காகச்செய்வதாகுமேஅல்லாது அறம் ஆகாது.

மனதில் குற்றமில்லாமல் செய்கிற அறம் எதுவென்றால் பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கு குற்றங்களுக்கும் மனதில் இடம் கொடுக்காமல் செய்கிற காரியங்களே அறம் எனப்படும். இறைவனை அடைதல் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செய்யும் சாதனைகளே சமயசாதனைகள் எனப்படும்.

## கோவிலும் கும்பா:....

(4ம் பக்கத்தொடர்ச்சி)

பட்ட நூலை நரம்புகளாகவும் கும்பத்தில் இடப்படும் பொன் பூ மணி முதலியவற்றை ரியமாகவும் மந்திரத்தை உயிராகவும் நெல் முதலிய தானியங்களை ஆசனமாகவும் தேங்காயைத் தலையாகவும், மாவிலையைச் சடையாகவும் கொண்டு இத் திருவடிவம் அமைகின்றது. இவ்வாறு அமைகின்ற கும்பம் உருவத்திருமேனியாகிய பிம்பத்தின் அருகில் வைக்கப்படும். பின்னர் தர்ப்பை, மாவிலை, முதலியவற்றைக் கொண்டு மந்திரங்கள் ஓதிப் பிம்பத்தில் உள்ள மூர்த்தியைக் கும்பத்தில் ஆவாகனம் செய்வர். இவ்வாறு ஆவாகனம் செய்யப்பட்ட மூர்த்தியை மங்கள முழக்கத்துடன் யாகசாலைக்கு எடுத்துச் சென்று அங்கு முறைப்படி செய்ய வேண்டிய கிரியைகளை செய்து மீண்டும் கும்பத்திலுள்ள புனித நீரை தர்ப்பையின் வழியாகப் பிம்பத்தில் சேர்ப்பதன் மூலம் அதனை முன்போல் தெய்வ சாந்நித்தியம் பொருந்தியதாகச் செய்வர். இதுவே குடமுழுக்கு விழா என்பர்.

குட முழுக்கை வேதம் நன்கு கற்று கிரியை முறைகளை நன்கு உணர்ந்த சிவாச்சாரியார்களைக் கொண்டு நடத்துவதுசிறப்பானது. முறை தவறாத கிரியை முறையால் செய்விக்கப்படும் கும்பாபிஷேகம் ஆலயத்தின் பெருமையை உணர்த்தி நிற்பதோடு சுடர்விட்டுப் பிரகாசிக்கவும் வழி செய்யும்.


# இந்து மதம்

ஹிந்து மதம் உலக மதம். உலக மதங்கட்கெல்லாம் தலையாய மதம் ஹிந்து மதம். இந்து மதம் யாரை எங்கே அழைக்கிறது? நம்முடைய குழந்தைகளையும் இளைஞர்களையும் நமது கலாசாரத்திற்கும், நமது பண்பாட்டிற்கும், நமது தெய்வத்திற்கும் சமீபத்தில் வர ஹிந்து கலாச்சாரம் அழைக்கிறது. இந்து மதம் ஒரு மாபெரும் ரதம். அந்த ரதத்தை இழுப்பதற்கு முதியோர்கள் மாத்திரம் காணாது. தேனினுமினிய உலக மொழியாகிய தமிழ் மொழி பயின்ற, மனதில் உறுதியுள்ள உடம்பில் வலுவுள்ள இளைஞர் படை தேவை. அனைவரையும் அழைக்கிறது ஹிந்து மதம். இந்து கலாசாரம் இந்து சமய திங்கள் வெளியீடு:

''உலகெலாம் படைத்துக் காத்து
உருவிலா தழித்து நாளும்
உண்மையாய் எண்ணமான
ஒருவனும் அருவனாகி
சலமிலா தென்னுவோர்களு
சத்திய மயமே யாகி
தனித் தனி பிரிந்த போதும்
தானதிற் பிரியனாகி
மலரின் மேல் தேவனாகி
மாலொடு புத்தனாகி
மறைமதாய் இயேசுவாகி
பல பல தெய்வமாகி
பற்பல மதங்களாகி
பக்குவப்படியே தோன்றி நிற்கும்
பரமனார் பெருமை போற்றி.

மதமாற்றம்- மதமாற்றம் பற்றி பகவான் சத்ய சாயிபாபா கூறுகிறார்! இறைவன் ஒருவனே. அவன் சர்வமதங்களின் மூலமாகவும் சாரமாகவும் உள்ளான். சர்வமதங்களும் அவனுடைய சங்கல்பத்தினால் உருவானவையே. அதனால்சர்வமதங்களும் அவனுடையவையே.

எந்தவொரு மதமும் மத மாற்றம் பற்றிப்போதிக்கவில்லை. ஏனென்றால் மதங்களைப் படைத்தவன் ஒருவனே. அப்படியிருக்க ஒருவன் ஏன்? எதற்காக மதம் மாறவேண்டும். மதம் மாறுவது கூடவே கூடாது என்கிறார் பகவான் சத்ய சாயிபாபா. மதங்கள்வேறுபட்டிருப்பினும் அவையாவுக்கும் ஆதி நாயகனாக ஈசன் இலங்குகிறான். மக்களின் இயல்பு வேறுபாட்டுக்கு ஒப்ப மதவேறுபாடும் இருக்கிறது. யார் யார் எந்த எந்த மதத்தின் மூலம் எப்படி யெப்படி இறைவனை வணங்குகிறார்களோ அப்படியெல்லாம் அவர் மக்களுக்கு ஊக்கம் கொடுத்து பக்தியை வளர்த்து அவர்கள் தம்மை வந்தடைவதற்கு வழிகாட்டித்தருகிறார். மதங்கள் அனைத்துக்கும் அவருடைய அனுக்கிரஹம் உண்டு. மதங்கள் பலப்பலவாக அமைந்திருப்பது மானுட இயல்புகளுக்குத் தேவையாம்.



கா. சின்னையா
(சங்குவாரி, கம்பளை.)

அவரவர் மதத்தை மக்கள் ஆழ்ந்து அனுஷ்டிப்பதற்கிடையில் மதங்களுள் சமரசம் காண்பது முற்றிலும் அவசியமாகிறது. சமரசம்
(7ம் பக்கம் பார்க்க)

''தென்னாடுடைய சிவனே போற்றி''
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி''

மில்க்வைற் சலவைப்பவுடர் துரித சலவைக்கும்
தூய வெண்மைக்கும் உதவுகிறது.
மில்க்வைற் சலவைப்பவுடர் வெற்றுப் பக்கற் 25
அனுப்பி வார நாட்கள் ஒவ்வொன்றிலும் பாராயணஞ்
செய்ய உகந்ததாக தொகுக்கப்பட்ட

''பஞ்சபுராணம்''

அரிய நூலைப் பெற்று பயனடைக.

மில்க்வைற், யாழ்ப்பாணம்.

கொழும்பில் மில்க்வைற் விற்பனையாளர்கள்:-

கற்பகம், பம்பலப்பிட்டி
எம். ஜி. எம். ஸ்ரோஸ்,
எம். டி. சுவாமிபிள்ளை சரஸ்வதி ஸ்ரோஸ்,
ஆனந்தா ஸ்ரோஸ் ஐந்து லாம்படிச்சந்தி புறக்கோட்டை.

# வடமேல் மாகாணத்தில் இந்துப் பிள்ளைகள் படும்பாடு

வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் இந்துப்பிள்ளைகள் இந்து சமயபாடம் கற்கமுடியாதிருக்கும் அவலம் குறித்து இந்துப் பெற்றேர்கள் மிகவும் கவலை கொள்ளவேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கிருர்கள் இது குறித்து கவலை கொள்வதைவிட ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பது இன்றைய நிலையில் அவசியமாகிறது.

ஏனெனில் சிலாபம், புத்தளம் பகுதிகளில் நூற்றுக்கணக்கான பாடசாலைகளில் கற்கும் இந்து மாணவர், மாணவிகளுக்கு இந்து சமயபாடம் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் பற்ருக்குறையாக இருந்து வருகிறது. ஆசிரியர் பற்ருக்குறை என்பது நீண்டகாலமாக இம் மாவட்டத்தில் நிலவிவரும் பிரச்சினையாகும் இது குறித்து அவ்வப்போது எழுப்பப்பட்டுவந்துள்ளதாயினும் எவருமே இதுவரை உரிய நடவடிக்கை எடுத்ததாகவில்லை.

புத்தளம் மாவட்டத்தில் ஒருகாலத்தில் தமிழ் பெரும்பாலும் வழக்கிலிருந்த நிலை மாறி இன்று தமிழும் சிங்களமும் கலப்பு மொழியாக தமிழ் மக்கள் மத்தியில் உபயோகிக்கப்படுகிறது. கணபதிப்பிள்ளை என்ற பெயர் கன்னங்கரா என்றும் சிவராணி என்ற பெயர் சிரியாணி என்றும் மாற்றம் பெற்றிருக்கிறது. இம்மாவட்டத்தில் அநேகமான தமிழ் கிராமங்கள் பலவும் இன்று பெயர்மாற்றத்துக்குள்ளாகியிருக்கிறது.

ஆனைமடுவம் என்ற பெயர் இப்போது ஆனமடுவ என்றும், காக்கைப் பள்ளி - காக்காப்பள்ளிய என்றும், ஆராய்ச்சிகட்டு என்ற பெயர் ஆராய்ச்சிகட்டுவ என்றும் பெயர் மாற்றத்துக்குள்ளாகியுள்ளது. இதுபோன்று வேறு பல தமிழ்க் கிராமங்களும் சிலாபம் மாவட்டத்தில் பெயர்மாற்றத்துக்குள்ளாகியிருக்கிறது.

புத்தளம் மாவட்டத்தில் இந்துசமயம் போதிப்பதற்கு போதிய ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினுல் இந்துப் பிள்ளைகள் இஸ்லாமிய பாடம், கிறிஸ்தவ பாடங்களைப் பயின்று சித்தியடைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இப்படியொரு அவலநிலை ஏன் இம்மாவட்டத்தில் ஏற்பட வேண்டும்? இது ஒருபுறமிருக்க அண்மைக் காலத்தில் ஆட்கள் சிலர் மதமாற்றத்துக்கும் ஆளாகியுள்ளனர். கவர்ச்சியான நிதியுதவிகள், வெளிகாட்டு நிவாரணப் பொருட்கள், மற்றும் வேலைவாய்ப்பு வசதிகளைக் காட்டி மதமாற்றம் நடைபெற்று வருகிறது.

இப்படியொரு துர்ப்பாக்கிய நிலைக்கு இந்துப் பிள்ளைகள் ஆளாகாது போதியளவு இந்து சமயம் கற்பிக்கும் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தால் இப்படி அவலம் இந்துக்களுக்கு புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டிருக்காது. இந்து சமய கலாசார ராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் இது விடயத்தில் தக்க நடவடிக்கை எடுத்து குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் இல்லையேல் புத்தளம் மாவட்டத்தில் இந்துப் பிள்ளைகள் பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

இப்போது இந்துக்களின் நலன்களைக் கவனிக்கவென்று ஒரு அமைச்சு இயங்கிவருகிறது. மிகவும் சுறுசுறுப்பான நடவடிக்கைகளை அமைச்சர் தேவராஜ் இதன் மூலம் மேற்கொண்டுவருகிருர். அவர் புத்தளம் மாவட்டத்தில் இந்துப் பிள்ளைகள் அனுபவிக்கும் கஷ்டங்களை அறிந்து கொள்வதும் அவசியமாகிறது.

இது ஒருபுறமிருக்க சில இந்து ஆலய சுற்ருடல்களும் அசுத்தப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. கருக்கப்பனை ஐயனர் ஆலய வளவில் பன்றி மந்தைகள் வளர்க்கப்படுவதாகவும், கள்ளு, சாராயத் தவறணைகள் இருப்பதாகவும் மக்கள் புகார் தெரிவிக்கிருர்கள். இந்தமாதிரியான நடவடிக்கைகள் கண்டிக்கப்படவேண்டும் இதைத் தடுத்து நிறுத்த அமைச்சர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதேஒவ்வொருவரதும் விருப்பமாகும்.

சுபாஷ்

---

## இந்துமத....

(6ஆம் பக்கத்தொடர்ச்சி)

காண்பது இறைவனுடைய பெருந்திட்டத்தைப் போற்றுவதாகும்.

ஈஸ்வரன் கற்பக விருக்ஷம் போன்றவன் கற்பக விருக்ஷத்தின் அடியில் இருந்து கொண்டு யார் எதை விரும்புகிருர்களோ அதை அடைகின்றனர். யார் என்னை எப்படி வழிபடுகிருரோ அவருக்கு நான் அப்படியே அருள் புரிகிறேன். பார்த்தா மக்கள் யாண்டும் என் வழியையே பின்பற்றுகின்றனர். கீதை.

எல்லாம் வல்லஇறைவன் ஒருவன்தான். கும்பிடுகிற இடம்தான் வித்தியாசம்.

ஹிந்துக்கள் - ''ஓம்''

கிறிஸ்தவர்கள்
கிரேக்கர்
ரோமானியர்
யூதர்
} 'ஆமென்'

முஸ்லீம்கள் ''அமின்''

என்றும் ஒரே பரம்பொருளைக் குறிக்கும் மேரி என்பது,ம் மாரி என்பதும் ஒன்றுதான்.



ஈழமணித் திருநாட்டில்

# ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சமிதியின்
# தோற்றம், வளர்ச்சி, இலக்கு

—— ★ ——

செல்வி வள்ளிநாயகி கணபதிப்பிள்ளை

வாழ்வில் குறிக்கோள் ஒன்றின்றியே பயனம் போன போக்கிலெல்லாம் வாழ்ந்து விஷயசுகம் நாடிச் சென்று, அலைந்து துன்பக்கடலில் அமிழ்ந்தி முடிவில் ஒருபிடி சாம்பலாய் அழிந்துபட்டுப் போகின்றது மக்கள் குலத்தின் பெரும்பகுதி. எங்கேயோ ஆயிரத்திலொருவரே உண்மை இன்பம் எதுவெனத் தேடி அதை அடைய முயல்கிறார்: அதிலும் ஆயிரத்திலொருவரே சரியான பாதையைத் தெரிந்துகொண்டு அவ்வழியில் வாழ முற்படுகின்றார்; இவர்களுள்ளும் ஆயிரத்திலொருவரே முன்னேறி குறிக்கோளை அடைகின்றார். இவ்வாறான தெய்வீக வாழ்வு வாழ்வோர், தாம் பேரின்பம் துய்ப்பதோடு தம்மை அண்டுவோரையும் பேரின்பம் துய்க்க வழிகாட்டும் சற்குருவாக விளங்கி, மக்கள்குலத்தை மிக உயர்ந்த நிலைக்கு ஆற்றுப்படுத்துகின்றனர். அப்படிப்பட்ட மகான்களுள் ஒருவராய் விளங்கியவரே அவதார புருஷராகத் தோன்றிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

## முதன்மை சிஷ்யை

இராமகிருஷ்ணர் 19 ஆம் நூற்றாண்டில் வங்காள நாட்டில் தோன்றினார் இவர் செல்லும் திசை எதுவெனத் தெரியாது வழி தடுமாறி அலைந்த பல படித்த வாலிபர்களுக்குச் சரியான பாதையைக் காண்பித்து அவரைச் சேர்ந்த துறவு வாழ்வில் உறுதிப்படுத்தியிருக்க உதவினார். அவர்கள் ஒரு திருக்கூட்டமாகச் சேரவே இராமகிருஷ்ண சங்கம் உருவாயிற்று. இவ்வாறு உருவான திருக்கூட்டத்தின் முதற்தொகுதியினர் பதினாறு பேராவர். இவர்கள் துறவும் தொண்டுமே வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு தியாக வாழ்வை மேற்கொண்டனர். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடருள் முதலிடம் வகிப்பவர் அவரது இல்லாளாகிய அன்னை ஸ்ரீ சாரதா தேவியார். அவர் கணவன் வாழ்ந்த கோயிற் கோட்டத்திலே வாழ்ந்து கணவன் மேற்கொண்ட துறவுவாழ்வுக்கு, தெய்வீக வாழ்வுக்கு உற்ற துணைவியானார். தானும் கணவனைப் போலவே பூரண துறவு நிலையில் நின்று புத்தகப் படிப்பெதுவும் இல்லாதிருந்தும் தெய்வீகக் கணவனின் புனிதமான வாழ்வாலும் போதனையாலும் ஞானத்தாய் என்ற மகோன்னதமான நிலை எய்தும் பேறு பெற்றார்.

## தலைமைச் சீடர்

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அன்புச் சீடர்களுள் தலைமைத்துவம் பெற்று விளங்கியவர் நரேந்திரன் என்ற பிள்ளைத்திருநாமம் பெற்ற சுவாமி விவேகானந்தர் ஆவர். இவர் தன் குருவிடம் பெற்ற ஞானப் பேற்றை உலகெங்கும் அள்ளிவீசும் ஆத்மீக ஜோதிப் பிழம்பாக விளங்கினார்; இவரிடம் அறிவும், ஆற்றலும் பொங்கி வழிந்தது; ஞானம் சுடர்விட்டுப் பிரகாசித்தது தனது குருநாதரின் உள்ளக்யர் குறிப்பறிந்து பாரத நாட்டின் ஆத்மீகச் செல்வத்தை மேலை நாடுகளுக்கு அள்ளிக் கொடுக்கவும் அவர்களின் விஞ்ஞானச் செல்வத்தை இந்தியநாடு பகிர்ந்துகொள்ளவும் உதவும் வகையில் படித்த வாலிபர்களை அறைகூவி அழைத்தார். துறவும் தொண்டும் குறிக்கோளாகக் கொண்டு தியாக வாழ்வுக்குத் தயாரான துறவியரை ஒன்று சேர்த்து, இராமகிருஷ்ண மிஷன் என்ற திருச்சங்கத்தை தாபித்தார். இச்சங்கத்தின் தலைமைப்பீடம் கல்கத்தாவில் "பேலூர்" என்ற இடத்தில் அமைந்துள்ளது. அதன் கிளைகள் உலகின் பல்வேறு நாடுகளிலும் பரவி ஆத்மீகப் பணியும் சமூகப் பணியும் புரிந்து வருவதை யாவரும் அறிவர்.

## சாரதா மடம்

ஆண் துறவியர் சங்கம் போன்ற அமைப்பொன்று அன்னை ஸ்ரீ சாரதாதேவியரை மையமாகக் கொண்டு பெண்களுக்கும் அமைய வேண்டும்; படித்த இளம் பெண்கள் ஆத்மீக விழிப்புப் பெற்று தியாக சிந்தனையுடன் துறவுபூண்டு மனுக்குலத்துக்கு விசேடமாக பெண்டிர்க்கும் பிள்ளைகட்கும் பணிபுரிய வேண்டும் என்ற விழுமிய கருத்தைச் சுவாமி விவேகானந்தரே தான் வாழ்ந்த காலத்தில் வெளிப்படுத்தியிருந்தார். அப்படியான பெண் துறவி வேண்டும் அதற்குரிய ஒழுங்குமுறைகள், கட்டுப்பாடுகள் எவை என்பன போன்ற விபரங்களைக்கூட சுவாமிஜி குறித்தும் வைத்துள்ளார். அவர் அன்று கொண்டிருந்த கருத்து ஆயிரத்துத்தொளாயிரத்து ஐம்பத்திநாலாம் (1954) ஆண்டு அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் நூற்றாண்டு விழாவோடு உருப்பெற்றது. பெண் சந்நியாசினிகளைக் கொண்ட சாரதா மடம் ஸ்தாபனமானது. இதன் தலைமைப்பீடம் கல்கத்தாவில் தக்ஷிணேசுவரத்தில் அமைந்துள்ளது. இந்தியாவில் கல்கத்தாவிலேயே இதன் கிளை ஸ்தாபனங்கள் பல இருக்கின்றன டெல்லி, சென்னை, திருச்சூர், திருவனந்தபுரம், பெங்களூர், அருணாசலப் பிரதேசம் போன்ற இடங்களிலும், அவுஸ்திரேலியாவில் சிட்னியிலும் இதன் கிளைகள் உள்ளன.

## சகோதரி நிவேதிதை

1967 ஆம் ஆண்டு சகோதரி நிவேதிதையின் நூற்றாண்டு விழா இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் கொண்டாடப்பட்டது. சகோதரி நிவேதிதை பிரித்தானியாவில் ஒரு கிறிஸ்தவப் போதகரின் மகளாகப் பிறந்தவர். ஆத்மீக வாழ்வில் நாட்டம் கொண்டிருந்தவர்; தனது சொந்த மதமான கிறீஸ்தவப் போதனையில் ஆத்மீக சாதனப் படிகளின் உச்சக்கட்டத்தை அடைவதற்கு வேண்டிய வழிமுறைகள் கிடைக்க

(9 ஆம் பக்கம் பார்க்க)

# ஈழமணித் திருநாட்.....

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில்லையே என்ற தாகத்தினால் புத்தகாத நூல்களைப் படிக்கத் தொடங்கினார். அக்காலகட்டத்திலேயே சுவாமிஜியைச் சந்தித்து, அவருடைய ஆழ்ந்த உள்ளத்தை ஊடுருவிச் சென்று, ஆத்மீக ஒளியைச் சுடர்விடப் பிரகாசிக்கச் செய்யவல்ல வேதாந்தக் கருத்துக்களைச் செவிமடுக்கும் வாய்ப்பைப் பெற்றார். சுவாமிஜியை தனது குருவாக ஏற்றுப் பூரண மனச்சாந்தி பெற்றார். துறவு பேற்கொண்டு பாரதநாடு வந்து, பாரதநாட்டுப் பழக்கவழக்கங்கள், பண்பாடுகளுக்கேற்ப வாழ்ந்து, பாரதநாட்டு மக்களுக்குத் தொண்டு புரியும் பணியை மேற்கொண்டார். சேரியிலே வழ்ந்து சேரிமக்களுக்குப் பணிபுரிதலையே ஆரம்பப் பணியாக மேற்கொண்டார். பெண்கள் வீட்டைவிட்டு வெளியேறுவதே அவமானமான செயலென்று அவர்களை வீட்டுக்குள் பூட்டிவைக்க விந்தையான காலம் அது. சகோதரி நிவேதிதை சொல்லொணாத சிரமப்பட்டு பெண்களுக்கென ஒரு பாடசாலையை நிறுவினார். தனது உடல், பொருள், ஆவி அனைத்தையுமே பாரதநாட்டு மக்களுக்காக அர்ப்பணித்தார். இத்தகைய தியாகத்தின் சின்னமாக விளங்கிய பெரியாரின் நூற்றாண்டு விழாவை கொழும்பிலும் கொண்டாடத் திருவருள் பாலித்தது.

## இலங்கையில் நூற்றாண்டு விழா

கொழும்பிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ணமிஷனைச் சார்ந்த பெண் அடியார்கள் ஒரு செயற்குழுவைக் கூட்டினார். இச் செயற்குழுவின் அழைப்பை ஏற்று கல்கத்தா சாரதா மடத்தின் பொதுச் செயலாளர் ப்ரவ்ராஜிகா பாரதிப்பிரணாஜி, ப்ரவ்ராஜிகா ஆத்மப்ரணாஜி என்ற இரு சந்நியாச சகோதரிகளின் திருவடி தீண்டப்பெறும் பாக்கியத்தை எமது ஈழமணித் திருநாடு பெற்றது. இலங்கையின் பலவேறு பாகங்களிலும் சகோதரி நிவேதிதையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சொற்பொழிவுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கொழும்பு, கண்டி, நாவலப்பிட்டி, மட்டக்களப்பு, திருகோணமலை, அனுராதபுரம், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் ஆகிய பல இடங்களிலும் இரு சந்நியாசிகளும் சொற்பொழிவாற்றினர். அவர்கள் ஈழத்தில் சாரதா மடத்துக் கிளை ஒன்று ஸ்தாபனமாவதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டால், அவ்வாறான மடம் ஒன்றை ஆரம்பிக்கலாம் என்ற கருத்தை வெளியிட்டனர். இந்தக் கருத்தை நடைமுறைப்படுத்து முகமாக கொழும்பில் "ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சமிதி" என்ற பெண்கள் சங்கம் தோன்றியது.

## சமிதியின் தோற்றம்

1970 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜனன தினமன்று திரிமூர்த்திகளை ஸ்ரீஸ்ரீ குருமஹராஜ், ஸ்ரீ சாரதா தேவியார், சுவாமிஜி இவர்களின் திவ்விய ஆசியும் அன்புவழி நடத்தலும் முன்னிற்க, அப்போது இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளையின் தலைவராக இருந்த ஸ்ரீமத் சுவாமி பிரேமானந்தஜீ மஹராஜ் அவர்களின் இதய சுத்தியோடு கூடிய ஆசியுடன், இச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. எமது நாட்டிலும் சாரதா மடத்தின் கிளை ஸ்தாபனம் அமைய வேண்டும்; ஆத்மீக தாகமும், தியாக சிந்தையும் உள்ள படித்த பெண்கள் சாரதா மடத்திற் சேர்ந்து துறவு பூண்டு சமயப் பணி, சமூகப்பணி ஆத்மீகப் பணி புரியவேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் உருவான சாரதா சமிதி, அதற்கென ஒரு தலைமைப் பீடம் அமைக்கும் முயற்சியில் 13 வருடங்களாக ஈடுபட்டு வந்தது. அதேவேளை பல்வேறு சமய சமூகப் பணிகளையும் மேற்கொண்டது. மனநோயாளர் மருத்துவமனைக்குச் சென்று அவர்களுடன் சாவகாசமாகக் கலந்துரையாடி உணவு வழங்கிவந்தது. சிறைச்சாலைக்குச் சென்று இந்துக் கைதிகளுக்கு பஜனை, பூசையுடன் அறிவுரையும் வழங்கிவருகிறது. மகசின் சிறைச்சாலையில் பிள்ளையார் கோவில் ஒன்று ஸ்தாபித்து அதைப் பராமரித்து வருகிறது. ஜிந்துப்பிட்டியிலுள்ள மஹாராஜா சத்திரத்தில், அவ்விடத்து வறிய சிறுவர்களுக்கு கெயர் ஸ்தாபனம் கொடுத்த திரிபோஷ உணவை மாதாமாதம் வழங்கிவந்தது.

இதைவிட, இராமகிருஷ்ணமிஷன் வாசிகசாலை மண்டபத்தில் தையல் வகுப்பு ஒன்றை நடத்தியது. அது தொடர்ந்து 1986 ஆம் ஆண்டிலிருந்து சாரதா குடீரில் நடைபெற்று வருகிறது. முதலுதவி வகுப்புக்கள் நடத்தி மாணவருக்குச் சான்றிதழ் வழங்கியது. வெள்ளப்பெருக்கு, சூறாவளி இனக்கலவரங்களினால் பாதிப்புற்ற மக்களுக்கு உடைகள், பணம் என்பவற்றைச் சேர்த்து வழங்கிவருகிறது. கடந்த வருடத்தில் இந்துசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்றைநடத்த ஆரம்பித்தது. இதுவரை 5 கருத்தரங்குகள் இடம்பெற்றுள்ளன.

## சாரதா சமிதிக்கென தனி இல்லம் உருவாதல்

இவ்வாறு இதுபோன்ற பல பணிகளில் ஈடுபட்டு வரும் ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சமிதி தனது பணிகளை விரிவுபடுத்தி சமிதியின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தனியான ஒரு கட்டிடம் இருக்கவேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்தது. சாரதா சமிதியின் பணிகள் சிறக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட இராமகிருஷ்ண மிஷன், விவேகானந்த வீதிப் பக்கமாக பணிரண்டு குளி நிலத்தை சமிதிக்கு குத்தகை அடிப்படையில் வழங்கியது. பரந்த உள்ளமும், பரோபகார சிந்தையும் கொண்ட பல அன்பர்கள் வழங்கிய ஆதரவையும் நன்கொடையையும் பதின்மூன்று ஆண்டுகளாக சமிதி கலைநிகழ்ச்சிகள், நாடகங்கள் மூலம் சேர்த்த பணத்தொகையையும் கொண்டு கட்டிடம் அமைக்கும் வேலையை ஆரம்பித்தது. 1983 ஆம் ஆண்டு மே மாதம் கட்டிடத்திற்கு அத்திவாரம் இடப்பட்டது. ஆனால் அதே ஆண்டு ஜூலை மாதத்தில் கொழும்பில் இடம்பெற்ற சூழ்நிலை காரணமாகச் சோர்வுற்றிருந்த சமிதி உறுப்பினர் கட்டிட வேலைக்கு முற்றுப்புள்ளி இட்டனர். ஆனால், திருவருட் குறிப்பு வேறு விதமாகவிருந்தது. ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்தஜீ அவர்களின் உற்சாக வார்த்தைகள் உறுப்பினர் உள்ளங்களில் புத்துணர்ச்சியையும் புதியதோர் உத்வேகத்தையும் ஊட்டின. கட்டிட வேலை ஆரம்பமாயிற்று. வேண்டிய பொருளுதவி உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் வந்துசேர்ந்தது. 1986 ஆம் ஆண்டு கட்டிடம் பூர்த்தியாகி, மே மாதம் 22 ஆம் திகதி வைகாசி மாதத்து விசாக பூரணை தினத்தன்று திறப்புவிழா அமைதியாக ஆனால் நல்ல ஆத்மீகச் சூழலில் நடந்தேறியது. ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்தஜீ அவர்கள் திரைநீக்கம் செய்து கட்டிடத்தைத் திறந்துவைக்க, ஸ்ரீ சக்ராவந்தஜீ அவர்கள் சடங்குகளை நிறைவேற்றிவைத்தார்கள். கட்டிடத்திற்கு "சாரதா குடீர்" எனப் பெயரிடப்பட்டது. அங்கே ஸ்ரீ சாரதா தேவியார், ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமிஜி ஆகிய மூவரும் அருள்பாலிக்கும் வகையில் மூவரது திருவுருவப்படங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. காலை, மாலை பூசை வழிபாடுகளும் பிரார்

(13ம் பக்கம் பார்க்க)



*அன்பளிப்பு*

"திருவுங் கல்வியுஞ் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப்
பேணுவாம்

"இந்து கலாசாரம்" முதலாம் ஆண்டு
நிறைவு மலருக்கு என்வாழ்த்துக்கள்

*—செந்தில்வேல்*



# இந்துகளுக்கு இல்வாழ்க்கை கூறுவதென்ன?

இல்லறம் என்பது இனிய மணங்கமழும் பூஞ்சோலை. அதில் தென்றலும் வீசலாம். புயலும் அடிக்கலாம். இப்படிப்பட்ட இல்லத்தை ஆள்பவள்தான் பெண். எனவே பெண்கள் எப்போதும் எதிலும் பொறுமையுடையவளாகவே இருக்க வேண்டும்.

“தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை” என வள்ளுவப்பெருந்தகை கூறியுள்ளார். அதாவது தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என ஐவகையிடத்தும் அறம் தவறாமல் போற்றுதல் சிறந்த கடமையாகும் என எடுத்துக்காட்டியுள்ளார். எனவே தான் இல்லத்துக்கு அரசியான பெண் நிறைவுள்ளமும், அன்புள்ளமும் கொண்டவளாக இருந்து தானம் வழங்கல் வேண்டும். “இல்லறமல்லது நல்லறமன்று” எமது இந்து சமயத்தைப் பொறுத்தவரை இல்லறத்தை நல்லறமாக்க சிவ புண்ணியம் செய்தலே மிகச்சிறந்த வழியாகும்.

புண்ணியத்தின் பயனை நமது வாழ்விற்கு துணை புரிகின்றன. நிலையில்லாத இந்த உலகில் எல்லாம் வெறும் மாயமே. அஞ்ஞான இருள் எம்மை விட்டு நீங்கி மெஞ்ஞான நிலையை அடைய வேண்டும். அதற்காகவேதான் ஈகைக்குணத்தை கௌவி கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும. “தர்மம் செய்வதில் முந்திக் கொள்ளுங்கள். ஏனெனில் அது துன்பத்தை விலக்கும்” என கவிவள்ளல் கண்ணதாசன் கூறியுள்ளார்.

இரப்போர்க்கு ஈயும் தன்மையுள்ளவன் இறைவனை நெருங்கியிருக்கிறான் என்பதே. ஆம். எவ்வளவு உண்மை. தானமும் தவமும் தமிழனுக்கு சிறப்பு அதேபோல் நாம் சிறப்புடையவர்களாகவே வாழ வேண்டும். கொடுப்பவர் மனதில் அகம் பாவம், பொறாமை, அழுக்கு போன்ற தூசிகள்படியாது பிறருக்காக வாழ்கிறேன் எனும் தெளிந்த உள்ளம் இருக்கும். அதுவும் தனது சொந்த உழைப்பால் ஈட்டிய செல்வத்திலிருந்து தன்னால் முடிந்தளவு அளிக்கொடுப்பதே சிறந்த தானமாகும் என சான்றோர் மீண்டும் வலியுறுத்துகிறார்.

ஆமாம் நாள் பார்த்து நேரம் பார்த்து செய்யக்கூடியதல்ல. என்றாவது ஒரு நாள் நாம் இறைவனிடம் செல்ல வேண்டும். நாம் இறக்கும் போது பணம், பிள்ளைகள், கட்டிய வீடு, புகழ். செல்வாக்கு எதுவுமே எம்முடன் கூட வரப் போவதில்லை. வருவது நாம் செய்த நல்வினையும் தீவினையும்தான நாம் கொடுக்க வேண்டும். நாம் உண்ணு

(12ம் பக்கம் பார்க்க)



## அரிவையர் அரங்கு

தயாரிப்பு: நிஷா சாந்தி

**With Best Compliments From**

# Cargo Care International

★ IMPORTERS ★ EXPORTERS ★ TRAVEL SERVICE
LICENSED CUSTOMS HOUSE CLEARING &
TRANSPORT AGENTS.

"BANKSHALL BUILDING"
198 1/2. 1st Floor,
Bankshall Street,
COLOMBO 11.
Telephone: 4 3 5 7 1 3

# இன்பம் எங்கே

எஸ். கருணானந்தராஜா
(தமிழாரியன்)

இன்பத்தை தேடுகிருய் தம்பி
இன்பத்தைதேடுகிருய்
அன்பு நிறைந்த அகத்தினில் அஃதின்
ஆழமுழுகி அறிதல் விட்டே —புற
இன்பதைத் தேடுகிருய் தம்பி
இன்பத்தை தேடுகிருய்.

ஏழ்மையதின்பமடா தம்பி
ஏழ்மையதின்பமடா
ஊழ்வினையென்றென்று உள்ளம்குமுருமல்
ஊக்கத்துடன தவசாதனை செய்திடில்
ஏழ்மையதின்பமடா தம்பி ஏழ்மைய
தின்பமடா.

அறியாமை இன்பமடா தம்பி அறியாமை
இன்பமடா
நெறியான தியான சுகத்தில் நிலைபெற்று
நிர்மல சாந்தியில் நீந்திமகிழ்ந்திடில்
அறியாமை இன்பமடா தம்பி அறியாமை
இன்பமடா.

பலமின்மை இன்பமடா தம்பி பலமின்மை
இன்பமடா
மலமென்னும் மூன்றும் அழிந்திடுமாறு
நல்
மாதவஞ்செய்திடு மேதகைமை பெறில்
பலமின்மை இன்பமடா தம்பி
பலமின்மைஇன்பமடா.

ஊனமதின்பமடா உடல் ஊனமதின்பமடா
ஞானவொளியிற் கலந்து நிறைந்துடல்
ஞாபமும் மறந்தே உயர்வெய்திடில்
ஊனமதின்பமடா தம்பி
ஊனமதின்மடா,

லட்சணமின்பமடா அவலட்சணமின்பமடா
எச்சணமேனும் பிரியாத ஞானத்தின்
உச்சியில் நின்று உலகை உணர்ந்திடில்
லட்சணமின்பமடா அவலட்சண
மின்பமடா,

மரணமதின்பமடா தம்பி மரணமதின்ப
மடா
கரணங்கள் நான்கும் ஒடுங்கிடுமாறு-நற்
காரியமாற்றிடும் வீரியம் வாய்த்திடில்
மரணமதின்பமடா தம்பி மரணமதின்
பமடா

## இராஜாதி இராஜன்



செல்வன் அருண் இராஜேந்திரன்

கொள்ளுப்பிட்டி நிமால்கா கார்டன்ஸ் ஏ. எம். டி. மொண்டிசோரி பாலர் பாடசாலையில் கிறிஸ்மஸ்பண்டிகையின் போது பாலர்களுக்கிடையே நடைபெற்ற உடையலங்காரப் போட்டியில் பரிசு பெற்ற நமது அன்புச் செல்வன் அருண் இராஜேந்திரனின் கம்பீரத் தோற்றத்தை படத்தில் காண்க!

# இந்துக்களுக்கு....

(11ம் பக்கத் தொடர்)

வது இருபிடிச்சோருனாலும் அதில் ஒரு பிடியையாவது பசித்து வருவோருக்கு இன்முகம் கூறி கொடுக்க வேண்டும். கொடுப்பவர் மனதில் அன்பும், அருளும், ஒழுக்கமும், பண்பும் சுடர் விட்டுப் பிரகாசிக்கும்.

நாம் தீவினைக்கு சவால் விட்டு விட்டு நல்வினையை செய்யவேண்டும். நாம் கற்றதை பிறருக்கு கற்பிப்பதும், ஒருவர் கேட்ட கேள்விக்கு சாந்தமாக விடைபகர்வதும் ஒருவரைத் தர்மம்தான. கொடுப்பதன் மூலம் சுவர்க்க பதமடைந்தவர்களுக்கு நாம் அத்தாட்சி செட்சத்தேவையில்லை. ஏனெனில் எமது சமய குரவர்களும், சில மன்னர்களும் அசைக்க முடியாத, மறுக்க முடியாத அத்தாட்சிகளாக அன்றும்- இன்றும், என்றும் விளங்குகின்றனர்.

நாம் பிறரை வாழ வைப்பதில் இன்பம் கண்டு அதன் மூலமே இறைவனைக் காண வேண்டும். பக்தியுடன் அவனைப்பாடி, உயிர்களுக்கும் அடியார்களுக்கும் இரங்கி, பொய்மை பேசாதிருக்க வேண்டும். கடவுள் கோபமாக இருந்தாலும் எமது மேன்மை செய்கையாலும், பிரார்த்தனைகளாலும் இளகி விடுகிருர். இந்த உலகில் அறியாமை இருளில் நிறைந்து மயங்கி தவிக்கிறோம். எனவே அதை விட்டு நீங்கி நல்வெறியில் வலம் வந்து எந்நாளும் நல்வினை மேற் கொண்டு தானம் பல செய்து வீடு பேறு அடைவோமாக!

என் கடன் பணி செய்து கிடப்பதே!

# சைவ அடியார் ரெங்கநாதபிள்ளை

இந்நாட்டில் சைவ சமயத்துக்கு தொண்டாற்றிய பெரியார்கள் பலர் உண்டு இவர்களில் சிறந்த தொண்டாற்றியவர்களில் அமரர் திரு. ஆர். எம். ரெங்கநாதபிள்ளையும் ஒருவர். இப்பெரியார் கிட்டத்தட்ட 60 ஆண்டு காலம் இலங்கையில் வாழ்ந்து பல்வேறு திருப்பணிகளில் ஈடுபட்டு சைவ சமய வளர்ச்சிக்கே தன்னை அர்ப்பணித்த பெருந்தகையாவர்.

இப்பெருந்தகையின் இளைய மகனான திரு ஆர் வைத்திமாநிதி அவர்கள் தந்தையின் திருப்பணியைத் தொடர்ந்து "இந்து கலாசாரம்" இதழின் கௌரவ ஆசிரியர் பொறுப்பை ஏற்று தந்தைக்கு மகன் ஆற்றும் உதவி இவன் தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல் என்ற பொய்யாமொழியின் கூற்றை நிரூபிக்கிறது.

இப்பெரியார் 1974ம் ஆண்டு காலமானபோது சைவப்பெருந்தகை சட்டத்தரணி க. சிவசுப்பிரமணியர்ஐயா அவர்கள் 17-9-74ல் தினகரன் பத்திரிகையில் எழுதிய அஞ்சலியை இங்கு மறுபிரசுரம் செய்கிறோம்.

— ஆசிரியர்



சைவ சமயத்துக்கும், சைவ கோவில்களுக்கும், சைவ ஸ்தாபனங்களுக்கும் சைவ இயக்கங்களுக்கும் மனம், வாக்கு, காயத்தை அர்ப்பணித்து சிறந்த தொண்டாற்றியவர்களில் ஒருவர் திரு. ஆர். எம். ரெங்கநாதபிள்ளை.

இப்பெரியார் சில வருடங்களுக்கு முன்னர் சிவபதம் அடைந்தார்கள். அந்தப் பெரியார் இந்த வாழ்வை வாழ்ந்து நிறைவெய்தியது 25ஆம் திகதி ஆவணி மாதம் 1974ஆம் ஆண்டு. அவர்கள் பிறந்த திகதி 7-10-1899 ஆம் ஆண்டு பிறந்த இடம் திருச்சனூர். அவர்கள் இலங்கைக்கு இளம் பருவத்தில் அதாவது 13 வயது இருக்கையில் வந்தார்கள்.

அவர்கள் இவ்வுலகைப் பிரியும்போது ஒரு மிக சிறந்த சம்பவம் நடந்தது. அதாவது அவர் இறக்கும்போது அவருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களை அழைத்து அவர்களில் ஒருவராகிய மூத்த மகன் திரு. ஆர் பரியேறும் பெருமான் அவர்களுக்கு விபூதியைத் தன்னுடைய கையால் அணிவித்து எல்லோருக்கும் சொன்னார் எதற்கும் பயப்பட வேண்டாம் சத்தியமே வெல்லும். திருக்கேதீஸ்வரத்துக்கு அரோகரா. முருகப்பெருமானுக்கு அரோகரா. இத்திவ்வியமான வாழ்த்துடன் அச்சைவப் பெரியாருடைய ஆவி பிரிந்தது.

பல வருஷங்களாக திருக்கேதீஸ்வர ஆலய சம்பந்தமாகவும் கதிர்காமத் தொண்டராகவும் ஜிந்துப்பிட்டி சுப்பிரமணிய சுவாமி தொண்டராயும், கொழும்பு விவேகானந்த சபை ஆயுள் அங்கத்தவராகவும் அத்துடன் கொழும்பில் உள்ள பல சைவக்கோவில்களிலும் சேவை புரிந்து பஜனைகளில் கலந்து மகாத்மா காந்தி சேவா சங்கத்தின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய பாக்கியம் அன்னாருக்குக் கிடைத்தது. இப்பெரியார் சமயத்துக்கும் சமூகத்திற்கும் இடைவிடாது தொண்டாற்றி வந்தார்கள்.

அவரைப்போல் நற்குணமும், நற்பண்பும், நல்ல தொண்டுகளும் ஆற்றியவர்கள் கிடைப்பது அரிது.

பழநி சைவசித்தாந்த காசிவாசி ஈசான சிவாசாரியார் சுவாமி அவர்களுடைய ஒரு சீடராக இருந்தார்கள் சுவாமிகள் ரெங்கநாதபிள்ளை அவர்களின் நற்குணங்களைப் பற்றி மிக பட்சத்துடன் அபிப்பிராயம் தெரிவிப்பார்கள். அவர்களுடைய துணைவி திருமதி உலகம்மா மக்கள் ஆர் பரியேறும் பெருமாள், ஆர். வைத்திமாநிதி அவர்கள். அந்த குடும்பத்தவர் திரு. ரெங்கநாத பிள்ளை அவர்களுக்கு மிக உதவியாக இருந்தார்கள் அவர்களுடைய பரோபகார சமய தொண்டுகள் சம்பந்தமாக.

எல்லாம்வல்ல சிவபெருமான் பெரியார் ஆத்மாவுக்கு சாந்தி கொடுக்கும்படி தாழ்மையுடன், திரு. ரெங்கநாதபிள்ளையை 55 வருஷத்திற்கு மேல் தெரிந்த அடியேன் பிரார்த்திக்கிறேன். பெரியாருடைய நினைவு எங்கள் மத்தியில் இருந்து எங்கள் சிவபக்தியையும், தொண்டுகளையும் புனிதம் செய்யுமாறு இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். எங்களை விட்டுப் பிரிந்த சைவப் பெரியார். பல, பல தேவாரங்களையும் படிப்பார்கள்.

---

## ஈழமணித்-

(9ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்த்தங்களும் இடம்பெற்று வருகிறது.

### சாரதா குடீர் விடுதி

குடீரில் 15 பெண்கள் தங்கியிருந்து வெளியே வேலைக்குப் போய்வருகிறார்கள். அவர்களுக்கு வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் யாவும் செய்து தரப்பட்டுள்ளன. அவர்கள் குடீரில் நடைபெறும் சமய நிகழ்ச்சிகள் யாவற்றிலும் சமிதியின் சமூகப் பணிகளிலும் பங்கெடுத்துக் கொள்கின்றனர். சாரதா குடீர், வெறும் விடுதியாக மட்டுமல்லாது, அங்கு வசிப்போர், இந்துப் பண்பாட்டுப் பின்னணியில் வாழ்ந்து சமய நெறி நிற்போராக இந்துப் பண்பாட்டில் வழி வருங்கால நற்பிரஜைகளை உருவாக்கும் தலைசிறந்த தாய்மாராக, பொதுப்பணிபுரியும் தியாகமுள்ள சமூக சேவையாளராக, துறவுபூண்டோர் யோகிகளாகி, தெய்வீக வாழ்வுவாழ்வோராக விளங்கக்கூடிய வகையிற் செயற்பட்டு வருகிறது.

செய்யும் பணியெல்லாம் இறைபணி செய்பவனும் அவன்; வினைப்பயனும் அவனுக்கே என்ற மனநிலையோடு பூரண சரணாகதி நிலையில்நின்று, செயலாற்றி சாரதா சமிதியின் குறிக்கோளை நிறைவேற்றி வைக்கவேண்டிய பொறுப்பையும் அந்த இறைமைத்துவத்திடமே ஒப்படைத்து அவன்தான் பணிந்து நிற்போம்.

ஓம்

சாந்தி! சாந்தி!! சாந்தி!

# மனிதவாழ்வில் சமயமும்

# ஆலயவழிபாடும்

"யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே"

என்று பகர்கிறது மூவாயிரம் தமிழ்

மனித வாழ்வு இயல்பாகவே குறைவுடையது. குறையிலிருந்து நீங்கி நிறைவு பெறுவதே வாழ்க்கை. இதற்கு சமயம் இன்றியமையாதது. சமயம் என்பது ஒரு மனிதனை நெறிப்படுத்தி அவன் உள்ளத்தை பக்குவப்படுத்தும் ஒரு சாதனமாக (வாழ்க்கை முறையாக) அமைகிறது. சமயவாழ்க்கையால் புலன்கள் தூய்மை அடையும். பொறிகள் இன்ப வைப்புக்களாக மாறும். இதயம் விரியும். ஈர அன்பு பெருகி வளரும். வேறுபாடுகள் மறையும். ஒருமை தோன்றும். ஒருலகம் மலரும்; இதுவே சமயத்தின் தேவையும், பயனும்.

கல்வியால் பெறும் அறிவில் இருந்து மனிதன் தனது ஆசை என்ற சேற்றிலிருந்து விடுதலை அடைகின்றான். அவன் இதயத்தின் நல்லெண்ணம் ஏனையோருக்கு ஏதோ ஒரு வகையில் நன்மை பயக்கக் கூடியதாக அமையவேண்டும்.

ஆலயவழிபாட்டால் மனிதன் தன்னை அறிகிறான்.

"தன்னை அறிந்தால்
தவம் வேறில்லை
தன்னை அறியச் சகலமும்
இல்லை"

என்று நற்சிந்தனையில் மிகச் சிறப்பாக யோகர் சுவாமிகள் எடுத்துரைக்கின்றார். மனிதன் தன்னிடமுள்ள விலங்குத் தன்மையை நீக்கி தெய்வீகத் தன்மையை அடைவதே வாழ்க்கையின் இலட்சியமாக அமைய வேண்டும். இதற்கு சைவசமயம் சில இயம நியமங்களைக் கைக்கொள்ளும்படி கூறுகின்றது.

இறைவன் தோற்றத்தினுள்ள எல்லா வகையான உயிரினங்களும் கல்வி அறிவு பெறும் வாய்ப்பு அற்றிருப்பினும் சில நியதிகளுக்கும், சட்ட திட்டத்திற்கும் உட்பட்டே வாழ்ந்து வருகின்றன. எனவே ஆறறிவு படைத்த மனித இனமும் வாழ்க்கையில் சில கட்டுப்பாடுகளைக் கைக்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. எமது வருங்காலம் சென்று கொண்டிருக்கும் காலகட்டத்தை நோக்கும்பொழுது மிகவும் ஒரு பயங்கர முடிவை எதிர்நோக்குகிறது.

பயத்தினால் உலக மகா யுத்தம் மூளுவதைவிட இறைபக்தி பிறந்து அன்பினால் பிணைக்கப்பட்ட ஏக

(19ம் பக்கம் பார்க்க)

## திருத்தம்

சென்ற 23-11-89 இந்து கலாசார இதழ் 9ம் பக்கத்தில் நாம் இந்து கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்களின் புதல்வி திருமதி கோவித்தியானந்தனை சென்னை மாநில கல்வி அமைச்சர் வரவேற்கிறார் என்று படத்திற்கு எழுதியுள்ள விளக்கம் தவறாகும். புதுச்சேரி மாநில கல்வி அமைச்சர் வரவேற்கிறார் என்பதே சரியாகும். தவறுக்கு வருந்துகிறோம்.

உங்களுக்கு தேவையான சகலவிதமான எவர்சில்வர், அலுமினியம் பிளாஸ்டிக் பொருள்கள், மண்ணெண்ணை குக்கர்கள், டோர்ச் லைட்டுகள், மின் அழுத்திகள் இன்னும் பல வீட்டுப் பாவனைப் பொருட்கள்

மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

லங்கா அலுமினியம் சப்ளையர்ஸ்

இறக்குமதியாளர்களும், விநியோக, மொத்த விற்பனையாளர்களும்

34 டாம் வீதி, கொழும்பு-12.

தொலைபேசி இலக்கம்: 31649

# அன்பளிப்பு

''பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்து நீபாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.''

— மணிவாசகப் பெருமான்

படிக்கப் படிக்க தெவிட்டாத திருவாசகம் போன்ற இந்துசமய திங்கள் இதழான ''இந்து கலாசாரம்'' முதலாம் ஆண்டு நிறைவு மலருக்கு என் இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

—அன்பன்

WITH BEST COMPLIMENTS

FROM

A WELL WISHER

## வளர்க இத் திங்கள் இதழ்

"இந்து கலாசார இதழ் ஆரம்பித்து ஓராண்டு நிறைவுறுவதை மகிழ்ச்சியுடன் அவதானிக்கிறோம். இத்திங்கள் இதழ் இந்து சமயத் திற்கு சேவை செய்து இந்துச் செய்திகளுடன் வெளிவருவது பாராட்டுக்



ஞரியது உலகின் மிகப் பழமை வாய்ந்த சமயமும் மொழியும் முறையே நமது இந்து சமயமும் தமிழ் மொழியுமேயாகும் இந்து கலாசாரக் கோடு பின்னிப்பிணைந்திருப்பது எமது தமிழ் கலாசாரம். தமிழரின் பாரம்பரிய மரபுகள் இந்து மரபுகளே. இந்த மரபுகளை தனித்துவமாக இந்து கலாசாரம் இதழ் எடுத்து இயம்புவதை நாம் மகிழ்ச்சியுடன் காண்கின்றோம்.

இந்து சமய கலாசார வளர்ச்சிக்காக திங்கள் இதழ் மென்மேலும் வளர்ந்து மலர வேண்டும். ஆல்போல் விழுது விட்டு பெரும் பணியாற்ற வேண்டும் என்பது எனது பிரார்த்தனை.

வாழ்க இத் திங்கள் இதழ்.

யோகேந்திரா துரைசாமி

## வள்ளலால் வாழ்க

ஐயா புரவல, அருந்தமிழ் வள்ளலால்,
உய்ந்தேன் துயரம் ஒழிந்தேன் - வந்தேன்
என்றுமைக் காண்பதென் றேங்கியங் குற்றேன்
அன்றுமைக் கண்டேன் அவாவினைத் தீர்த்தேன்
நேரிலே கண்டதால் நிம்மதியடைந்தேன்,
சீரிய பண்பெலாம் செய்கையால் கண்டேன்,
போதுமே யான்செய் புண்ணியம் ஐயா,
யாதுமே குறையில்லை, யான்தவத் தானே,
மீண்டுமெம் மகனார் பெய்யனைத் தையினில்,
ஆண்டுயாம் வருங்கால் அறிமுகம் தொடரும்,
அதுவரை நன்றிகள் ஆம்பல வணக்கம்,
இதுகிடைத்திடுக, என்றுமே வாழ்க.

தாமரைத்திவான், ஈச்சந்திவு

நன்றி: மில்க்வைற் செய்தி


WITH THE BEST COMPLIMENTS

FROM

*Dharshana marketing Services*
*Agape Travels & Tours*
*Metro Graphic Service* (ADVERTISING)

**T. THEVARATNAM** [ Paul ]
MANAGING DIRECTOR

S 75, 3rd Floor,
Colombo Central Supermarket
Colombo 11.
549802 - 433310

METRO GRAPHIC SERVICE
29/1, Bristol Street.
Colombo-1.
Tel: 545442 - Ex 209

# இந்துகலாசாரம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றத் தலைவர் திரு. ந. யோகசுந்தரம்



திரு ந யோகசுந்தரம்
இந்துகாலாசார மன்றத் தலைவர்

பின் வரும் ஆசிச்செய்தியை அனுப்பியுள்ளார்:-

இந்துசமய திங்கள் வெளியீடான இந்துகலாசாரம் எத்தனையோ இடர்களுக்கிடையில் தனது ஓராண்டை நிறைவு செய்து இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்து வைத்திருப்பது கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றத்தினராகிய எமக்கு மகிழ்ச்சியாயியும் பெருமையாயும் இருக்கிறது.

இந்த ஓராண்டுகாலத்தில் இந்துகலாசாரம் ஆற்றியுள்ள பணி சிறிதாயினும் இந்துக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதை காணக்கூடியதாய் இருக்கிறது.

கொழும்பில் இன்று எத்தனையோ பெரிய பெரிய இந்துஸ்தாபனங்கள் உண்டு. அரசினரின மானியங்களை கூடப்பெறுகின்றன. ஆனால் சமயப பிரசாரத்திற்கு அதிகம் செய்வதாய் இல்லை. ஆனால் ஒரு சின்னஞ்சிறு எமது மன்றம் இந்துசமய பிரசாரத்தையே முழு நோக்கமாக கொண்டு இச்சஞ்சிகையை வெளியிட்டு வருகிறது. இச்சஞ்சிகையை இந்துப்



திரு. எம். சதாசிவம்

இந்துகாலசார வளர்ச்சியில் பெரும் பணி ஆற்றி வரும் மற்ற பொருளாளர்

பெருமக்களும் இந்து சமய ஸ்தாபனங்களும் ஆதரிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.



இந்து கலாசார ஆரம்பவிழாவுக்கு வருகை தந்த முன்னாள் இந்துகலாசார அமைச்சர் திரு.ச இராசதுரையை மன்றச்செயலாளர் திரு ச. கனகசபாபதி வரவேற்கும் காட்சி.

## சுவாமி சச்சிதானந்த யோகிராஜ்

அகிலம் போற்றும் அருட்குருவாக, சாதனை பயிற்றும் சற்குருவாக, யோக வேதாந்தப் போதகராக, சிவானந்த சுவாமிகளின் சீடராக விளங்குகிறார் சுவாமி சச்சிதானந்த யோகிராஜ்
சீர்மிகு செட்டிபாளயத்தில் பிறந்து ரிஷிகேசத்தில் இறையருள் நிறைந்து, இந்தியாவிலும் இலங்கையிலும் அருட்பணியாற்றி இன்று அமெரிக்காவில் 'பூரணயோக சங்கம்' திசையெல்லாம் யோக ஒலிபரப்ப அருட்பணியாற்றுகின்றார். கடந்த டிசம்பர் 22-ம் திகதி சுவாமிஜி அவர்களின் ஜெயந்தி தினம். அன்பர்கள் அனைவருக்கும் ஆனந்தமான மிக நன்னாள்.

வாழிய சற்குரு நீடூழி
மிகஅருள சுகத்தொடும் நீர் வாழி
மிக்க புகழொடும் அருள் நிறைவோடும்
அருட்பணி செய்திட பலபல ஆண்டுகள்
வாழிய சற்குரு நீடூழி
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்புக் குழந்தைகள்
யாழ். சச்சிதானந்த சிறுவர் சங்கம்
நன்றி: மின்னலைச் செய்தி

# மனிதம்.

(14ம் பக்கத்தொடர்ச்சி)
சமூக வாழ்வு உத்தமமானது.

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை. . . . . .''
என்று திருமூலர் சொன்னது போல் நாம் அனைவரும்
''அன்பே சிவமயம் சத்தியமே பரமசிவம்''
என்ற நினைவில் வாழ்வோமாயின்
''இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை''
என் கடன் பணி செய்து கிடப்பதே.
நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்.

என்ற அப்பர் வாக்கை வேதவாக்காக நாம் எடுத்து அவர் வழியில் எம்வாழ்க்கையை அமைக்கும் நோக்குடன் முனாயில் வாகீசர் —சிவத்தமிழ்ப் பணி மன்றம் —சில சிறார்களால் ஆரம்பிக்கப்பட்டது. இன்று நாமனைவரும் ஒன்றுசேர்ந்து சமயப்பணியும் சமுதாயப்பணியும் செய்திட அனைத்து சமய நிறுவனங்களையும், தனி நபர்களையும் அன்புடன் இருகரங்கூப்பி அழைக்கின்றோம்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வே

தொடர்பு முகவரி:—
சு. முகுந்தன்
(அகில இலங்கை வாகீசர் சிவத்தமிழ்ப்
பணி மன்றம்)
இல. 410/27
பௌத்தலோக மாவத்த
கொழும்பு - 7

# தமிழ்த்தாயைச் சிந்தைசெய்வோம்

காதிலகுங் குண்டலமாக் குண்டலகே
சியுமிடையே கலையாச் சாத்தன்
ஓதுமணி மேகலையும் ஒளிர் கைவளை
யாவளையா பதியும் மார்பின்
மீதணிசித் தாமணியாச் சிந்தாம
ணியுங்காலில் வியலசிலம்பாத்
தீதில்செல் பதிகார மும்புனைந்த
தமிழணங்கைச் சிந்தை செய்வோம்.

—சங்கப்புலவர்

*With Best Compliments From*

**Farwin & Company**

WHOLESALE DEALERS & COMMISSION AGENTS

Grams: " ROSEFLOWER "
Phone: 25171

216 FOURTH CROSS STREET,
COLOMBO - 11.

# நமது நோக்கு

## எமது பணி

இந்து கலாசாரம் தனது இரண்டாவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கின்றது. பத்திரிகை உலகம் இன்று எதிர் நோக்கியுள்ள சாதக பாதக அம்சங்களை வைத்துப் பார்க்கும் பொழுது எமது கடந்த கால பயணத்தின் தாற்பரியத்தை உணர்ந்து கொள்ளலாம். எமக்கு ஏற்பட்ட சோதனைகள் அனைத்தையும் சாதனைகளாக்கி கடந்த வருடத்தையும் கடந்து வந்துள்ளமை எமக்கு பெரும் மகிழ்ச்சி தருவதாக அமைந்துள்ளது. இதற்கு வாசகர்களினதும், அன்பர்களினதும், வள்ளல்களினதும் ஒத்துழைப்பும் ஆதரவுமே இதற்குக் காரணமாகும்.

இலங்கையில் நொந்துபோய், முடமாக்கப்பட்டுள்ள இந்து கலாசாரத்துறைக்கு புத்துயிர் கொடுக்கும் நோக்கத்துடனேயே இந்து கலாசார ஏடு பணியாற்றி வருகின்றது. இத்துறை சார்ந்த மக்களையும், அமைப்புக்களையும் தட்டியெழுப்பி அழிந்து விட்ட, அழிந்துகொண்டு போகின்ற, அழியாது தமிழ் மக்களிடையே நிலவுகின்ற எச்சசொச்ச இந்து கலாசார அம்சங்கள் அனைத்திற்கும் புத்துயிர்ப்பு கொடுக்க அவர்களைத் தூண்ட வேண்டும் என்ற இலட்சிய வேட்கையில் செயற்படும் இந்து கலாசாரம் இத்துறையில் ஒரு சிறு விழிப்புணர்ச்சிக்காகவேனும் வித்திட்டிருக்குமானால் அதனையே எமதுகடந்தகால வெற்றியாக அமையும்.

இப்பயணத்தை எதிர் காலத்தில் மேலும் தொடரவும இந்து கலாசார துறையில் முழுமையயான ஒரு புத்துயிர்ப்புக்கு ஏற்ப தொடர்ந்து பணியாற்றுவதாகத் திடசங்கற்பத்துடன புதிய ஆண்டில் காலடி எடுத்து வைப்பதுடன கடந்த கால ஒத்துழைப்பை வாசகர்களாகிய நீங்கள் தொடர்ந்தும் நல்க வேண்டுமென்றும கேட்டுக் கொள்கிறோம்.

அனைவரும் ஒன்றிணைந்து தமிழ்சமூகத்தின் அதனுடன் ஒன்றிணைந்துள்ள இந்து கலாசாரபண்பாட்டின் வளர்ச்சிக்கும், உன்னத நிலைக்குமாக எம்மை அர்ப்பணித்துக் கொள்வோம்

# வாசக நேயர்களுக்கு

இந்து கலாசாரப் பத்திரிகையின் முதலாவது ஆண்டுமலர் வெளியீட்டில் மிகவும மகிழ்ச்சி அடைகின்றோம். நமது சமயம், கலாசாரம், இயல், இசை, நாடகம் யாவற்றையும் உலகம்போற்ற பல்லாண்டு காலமாக பராமரித்து வந்த எமது முன்னோர்களின் வழியில் தொடர்ந்து சேவை செய்ய "இடரினும் தளரினும் உனது கழல் தொழுது எழுவேன்"— என்று எல்லாம்வல்ல இறைவன் பாதாரங்களில் வணங்கி வேண்டிக்கொள்கின்றோம்.

நமது நாட்டிலே இன்று பொதுவாக நடைபெறும் கலாசார நிகழ்ச்சிகளுக்கும் மற்று தேசிய நிகழ்ச்சிகளுக்கும் இந்துமத சார்பில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு யாரை அழைப்பது என்ற ஒரு பெரும் பிரச்சினை நெடுங்காலமாக இருந்து வருகின்றது. இதற்கு முறையான ஒரு ஏற்பாட்டை செயல்படுத்துவதில் எமது "இந்து கலாசாரம்" ஈடுபட்டு வருகின்றது அது என்னவென்றால் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் குருமஹா "சந்நிதானம் அவர்களுக்கு கொழும்பில் ஒரு மடம் அமைத்து, அரசாங்க ரீதியில் நமது நாட்டிலே சகல மத குருமார்களுக்கும் கிடைக்கப்பெற்றுள்ள அங்கிகாரங்களைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்து சுவாமி அவர்களை கொழும்பிலும் தங்கவைத்து இங்கு நடைபெறும் பொது வைபவங்களில் நமது சமயத்தை பிரதிநிதித்துவபடுத்த வைப்பதாகும். இது விஷயமாக இந்து சமயம் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்களது கவனத்திற்கு சமர்ப்பித்து இருக்கின்றோம். எமது இந்த கோரிக்கை இனிது



- ஆர். வைத்திமாநிதி -
(கௌரவ ஆசிரியர்)

நிறைவேற எல்லாம் வல்ல இறைவனை நாம் தினமும் பிரார்த்திக்கின்றோம்.

பல இன்னல்களுக்கு இடையே மிகவும் சிரமப்பட்டு குறுநகை நடந்து செல்கின்றோம். எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும், ஆதரவும் அளித்து வரும் உங்கள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்"



# தைப்பொங்கல்

ஹிந்து தமிழ் பெருங்குடி மக்களால் பண்டு தொட்டுக் கொண்டாடப்படுவதும் உத்தராயண ஆரம்பகாலமாகிய தினமே தைப்பொங்கல் எனப்படும்... அண்ட உலகமனைத்தும் தோற்றுவித்த இறைவன் உயிரினங்களைப் படைத்து அவ்வுயிர் வாழ்க்கைக்காகத் தானியங்கள் பழவர்க்கங்கள் முதலியவற்றையும் தோற்றுவித்தான். ஆதலால்தான் எப்பொருளையும் முதலில் இறைவனுக்கு நிவேதித்து பின்னர் நாம் உண்ணவேண்டும் என ஆன்றோர் வழி வகுத்துள்ளனர். இதனால்தான் உலகெங்கும் ஜோதிவடிவமாக விளங்கும் சூரியனுக்கு அவன் கருணையால் உண்டாக்கப்பட்ட உணவு பதார்த்தங்களை எல்லாம் சூரியன் முன்னிலையில் வைத்து படைத்து வழிபட்டு வருகின்றோம்.

இத்தினத்தன்று அதாவது தைமாதம் (14 - 1 - 90) ஞாயிற்றுக்கிழமை உத்தராயணப் புண்ணிய காலம். வீட்டு முற்றத்தில் கோலமிட்டு, விளக்கேற்றி பூரண கும்பம் வைத்து புதுப் பானையில் பால் விட்டுப் பொங்கல் பூஜை செய்தல் வேண்டும். உதயத்தில் சூரிய பகவானின் வருகையை எதிர்பார்த்து அன்றைய

கா. சின்னையா சங்குவாரி, கம்பளை.

தினம் நன்னாளாக வேண்டுமென்ப் பாஸ்கரனைப் பிரார்த்தித்து பால், பழம் பொங்கல் பதார்த்தங்களை நிவேதித்து துயில் எழுந்து ஸ்நானம் செய்து வெளிக் காற்றில் உலாவி பூஜை செய்து உடனே சாத்வீக ஆகாரமான வெண் பொங்கலை கூட்டு கொஞ்சம் புசிக்க வேண்டும். இச்சடங்குகள் எல்லாம் நம் நன்மையை உத்தேசித்தேயாகும்.

சம்சாரிகளுக்கு இது ஓய்வு மாதம். ஆகையால் பொங்கலுக்கு வேண்டி வீடு வாசல்களைச் சுத்தம் செய்து வெள்ளையடிக்க சௌகரியமுண்டு. பழையவைகளை கழித்து புதியவைகளை உபயோகிக்கும் நாள் சங்கராந்தியன்றுதான். தைமாதப் பிறப்பு முதல் ஆரோக்கிய மாதம் ஆரம்பமாகிறது. பனி, குளிர் அதிகமாக இருந்தாலும் தலை முகம் முதலியவைகளை மூடிக்கொண்டு உறங்காமல் அதிகாலையில் நான்கு மணிக்கே எழுந்து குளித்து பஜனை செய்து வருவதால் அது முதல் சூக்ஷ்ம காலைவிழிப்பு உண்டாகக் காரணமுண்டு. ஆனால் காலக் கொடுமையால் பலர் இக்கட்டளைகளை அலட்சியம் செய்துபல வியாதிகளுக்கு ஆளாகி அகால மரணத்தை தழுவிக் கொள்கிறார்கள். நமக்குப் பிடிக்காவிட்டாலும் மார்கழி 1ஆம் நாள் தொடக்கம் அதிகாலை எழுந்து நீராடுவது நன்மை என அறிந்து நடக்கவும்.

சங்கீத தேகாரோக்கியம் எனக் கண்டுபிடித்திருக்கிறார்கள். சங்கீதம் கற்பவர்கள் காலை நாலு மணிக்கு எழுந்து கற்கிறார்கள். வேதம் கற்பவர்களும் அப்

(23 ஆம் பக்கம் பார்க்க)

**With Best Compliments From**

SOLE DISTRIBUTORS OF

## MYSTIQUE HERBAL SKIN CARE PRODUCTS

சருமத்தின் ஆரோக்கியத்துக்கும், சிறந்த பாதுகாப்பிற்கும் நற்பயனளிக்கும் முகமாக விஞ்ஞான முறைப்படி, மூலிகைகளான சந்தனஎண்ணெய், தேன், ஆலிவ் எண்ணை, கறுவா எண்ணை, சோயா எண்ணை, நல்லெண்ணை, சற்றாழை, பச்சைப்பயறு, கெக்கரிக்காய் ஆகியவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்டவை

## மிஸ்டிக் சரும சஞ்சீவி க்ரீம்கள் / லோஷன்கள்

இவை சருமத்தின் எண்ணைத்தன்மை, வரட்டுத்தன்மை,
மிருதுத்தன்மை, முகப்பரு ஆகியவற்றிற்கு
பூரண நிவாரணம் அளித்து உங்கள் சருமத்தை
புதுப்பொலிவுடன் திகழவைக்கும் சக்திவாய்ந்தது

## மிஸ்டிக் - உங்கள் மேனி எழிலின் ரகசியம்

மேலும் விபரங்களுக்கு மேற்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

## Medicone Marketing Services (Pvt) Ltd.

19/4 C PAGODA ROAD, NUGEGODA.
Telephone: 552023

## தைப்பொங்...

(21ம் பக்கத்தொடர்)

படியே. அப்பொழுது மூளை சுத்தமாக இருக்கும். கற்றதை மறவாமல் வைத்திருக்கும் ஞாபகசக்தி மனோசக்தி அதிகரிக்கும். ஆகையால் பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் கற்கும் மாணவர் மாணவிகளும் இவ்வருஷம் மார்கழி மாதம் முதல் தினதி முதல் அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு வீட்டிலேயே கற்கப் பழகுவது சகல நன்மைகளையும் கொடுக்கும் எனத் தெரிந்து கொள்ளவும். பாடசாலைகள் விடுமுறையான நாள் வீட்டில் அனுசரிப்பது சௌகரியமாயிருக்கும். மேன்மைதரும்.

இம்மாதிரி காலை விழிப்பு, ஸ்நானம், உபவாசம், சாத்வீக ஆகாரம் முதலியன மிகக் குளிர்காலமான மார்கழி மாதத்தில் செய்யப் பழகின இப்பழக்கம் பின் மாறுமல் வருஷ முழுவதும் தொடர்வது கஷ்டமல்ல.

நாம் எல்லோரும் க்ஷேமமாக இருக்கும் பழக்கம், நம் நாடு மேன்மை அடைய வேண்டியும் ஆரோக்கியம் விவசாயம பயிர்கள் அபிவிருத்தி அடைய வேண்டியும் ஆரோக்கியத்திற்கு ஆரம்பமான இந்த மார்கழி மாதம் முதலாவது மேலே கூறிய பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்திருப்பது (2) ஸ்நானம் செய்வதும் (3) பஜனை செய்வதும் (3) சூரியன் உதிக்கும் பொழுது சூரிய நமஸ்காரம் முதலிய தேகப்பயிற்சி செய்தல் (4) சாத்விக உணவு உண்ணல் (5) எக்கஷ்டத்திலும் மனதை சோர்வு அடைய விடாமல் உற்சாகமாக துக்கத்தையும் சுகமாக ஏற்று நடப்பது ஆகியவைகளை அனுசரித்து இந்த நாட்டை மேன்மைப் படுத்த எல்லாம் வல்ல இறைவன் யாவருக்கும் ஊக்கமளித்து காப்பாற்றுவாராக.

— சுபம் —

### யோகிராஜ்
## சுவாமியின் அருளமுதம்

| பேச்சு | | உணவு | |
|---|---|---|---|
| உண்மையே | பேசுக | பசியறிந்து | உண்க |
| நன்மையே | பேசுக | பகிர்ந்தளித்து | உண்க |
| அளவாகப் | பேசுக | அளவறிந்து | உண்க |
| மெதுவாகப் | பேசுக | ஆறுதலாக | உண்க |
| இனிமையாகப் | பேசுக | நவைகு மென்று | உண்க |
| சிந்தித்துப் | பேசுக | நல்ல உணவு | உண்க |
| சமயமறிந்து | பேசுக | கனிகள் நிறைய | உண்க |
| சபையறிந்து | பேசுக | கடவுள் நினைவில் | உண்க |
| பேசாதிருந்தும் | பழகுக | உண்ணாதிருந்தும் | பழகுக |

நன்றி: மில்க்வைற் செய்தி

### மகா மந்திரங்கள் மூன்று

என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டிய மகா மந்திரங்கள் மூன்று உள. அவை -

கடவுள் மேல் அன்பு வைத்திருங்கள்
பாபத்திற்கு அஞ்சுங்கள்
சமூகத்தில் நல் ஒழுக்கத்தைக் கடைப்பிடியுங்கள்.

எவர் இந்தக் மந்திரங்களின் பிரகாரம் கண்டிப்பாய் ஒழுகுகிறாரோ அவரையே ஒரு உண்மையான மனிதர் என்று அழைக்க முடியும்.

சாயி பாபா

எமது நல்வாழ்த்து !

வசந்தமாளிகை
ஜுவலர்ஸ்

9, செட்டியார் தெரு சந்தி,
கொழும்பு 11.
தொலைபேசி: 25798

*With the Compliments*

*of*

# RENUKA INDUSTRIES

**IMPORTERS & EXPORTERS**

MANUFACTURERS: **IN ALL KINDS OF**

**HOUSEHOLD**

ALUMINIUM WARES

**170-172 OLDMOOR STREET,**

**COLOMBO - 12**

**Telephone: 35579**

# வாசகர்வட்டம்

## திருவருள் முன்னிற்க

அன்புடைப் பத்திராதிப!
இந்து கலாசாரம்,
கொழும்பு.

''நல்லை ஆதின குருமகா சன்னிதானத்துக்குத் தலை நகரில் ஒரு மடம்'' என்ற மகுடம் தாங்கி வெளிவந்த கட்டுரையை வாசித்தேன் அகமிக மகிழ்ந்தேன்.

அதில் தாங்கள் குறிப்பிட்டுள்ளவை அனைத்தும் உண்மையே. நான் கொழும்பிலிருந்த காலத்தில் பொது வைபவங்களில் இராமகிருஷ்ண மடத் தலைவர் சுவாமி பிரேமாத்மானந்தஜி தான் பெரும்பாலும் பிரதிநிதித்துவப் படுத்துவார். மற்றப்படி ஏதாவது ஒரு கோவில் அர்ச்சகர் தான் இருப்பார் அப்பொழுதே இது பற்றிச் சர்ச்சைகள் நிகழ்ந்தன. இதனை நிவிர்த்தி பண்ண ஒருவரும் முன்வரவில்லை.

நீங்கள் எழுதி இருப்பது போல இந்து சமயச் சார்பில் எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பெரியவர் நல்லைஆதின முதல்வரவர்களை அவருக்கு உரிய இடத்தைக் கொடுத்து கௌரவப் படுத்த வேண்டியது நமது சமயத் தலைவர்களின் பெரும் கடமையாகும்.

தற்போதுள்ள ஆதின முதல்வர் ஸ்ரீ-ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஒரு துடிப்பும் முற்போக்கான கொள்கைகளும் கொண்டவர். சைவ சமய வளர்ச்சிக்கு ஈகைவாவகையாகவும் மிகவும் பாடுபடுபவர். அவரோடு தொடர்பு கொண்டு இவ் விடயமாக அவரது பூரண சம்மதத்தைப் பெற்று ஒரு மடம் அமைப்பதற்கு அவரை அங்கு சிலநாட்கள் எழுந்தருளப் பண்ணவும் ஆவன செய்யவேண்டும். அவர் இதற்குத் தமது ஒப்புதலை அளிப்பார் என்பதற் கையமில்லை.

இவ்விஷயத்தை ஆறப் போடாது இதுபற்றி இந்து சமய அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்களுடனும் அமைச்சர் செள. தொண்டமான் அவர்களுடனும் தொடர்பு கொண்டு அவர்களின வழிகாட்டலையும் உதவியையும் பெற்று இந்த கைங்கரியத்தை நிறைவு செய்ய முழுமூச்சுடன் செயல்படுவீர்கள் என எண்ணுகிறேன்.

இதனை தங்கள் உள்ளத்தே உள்நின்று உணர்த்திய உடையானை எவ்வாறு போற்றுவது. அவனது அருள் இன்றேல் இச்செயல் முற்றுமா.

சைவ சமயத்தின் எதிர்கால வளர்ச்சிக்கும் இஃது இன்றியமையாததாகும்.

வெல்க தங்கள் தொண்டு
''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்''
சிவ சிவ

அன்பன்,
சைவமணி சோ. க. வேலாயுதர்
பண்ணாகம், சுழிபுரம்


with best compliments
from

A.C.I. LIBRA MARKETING

General Merchants & Commission Agents

540646

A.C.I
161, 4th Cross Street,
COLMBO-11

# இந்து கலாசாரமே
# வளர்க! வாழ்க!!

இந்து கலாசாரம் சஞ்சிகையானது தனது இரண்டாவது ஆண்டில் காலெடுத்து வைத்திருப்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைவதோடு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்து கலாசாரம் சஞ்சிகையின் ஆசிரியர்குழுவைச் சேர்ந்த பெரியவர் ஒருவர் சில மாதங்களுக்கு முன்னர் ஒரு நாள் என் வர்த்தக நிலயத்துக்குள் புகுந்து என் முன்னே வந்து வணக்கம் சார் என்று கூறி மிகவும் அடக்கத்துடன் நின்றார். என்ன விசயம் யாரைப் பார்க்கவேண்டும் என்று கேட்டேன் வந்தவர் சார், இந்த வர்த்தக ஸ்தாபனத்தின் உரிமையாளர் திரு. ஆர். விஜயபாலன் அவர்களைப் பார்க்கவேண்டுமென்றார். திரு. விஜயபாலனை உங்களுக்கு தெரியுமா? என்ன விசயமாக அவரைப் பார்க்க விரும்புகிறீர்கள் என்று கேட்டேன்.

வந்தவர் ''சார், அவரை நான் நேரில் பார்த்ததில்லை ஆனால் அவர் பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றார்.

''சரி நான் தான் அந்த விஜயபாலன். வந்த விசயத்தைச் சொல்லுங்கள்'' என்றேன்.

''சார், இந்து சமய வளர்ச்சியை குறிக்கோளாகக் கொண்டு இந்து கலாசாரம் என்ற சஞ்சிகையை நடாத்திவருகிறோம். இந்த சஞ்சிகைக்கு நீங்கள் சிறிது விளம்பரம் தந்து உதவ வேண்டும் என்று கேட்டார். அவர் கொடுத்த சஞ்சிகையை அரை குறையாக புரட்டிப் பார்த்து விட்டு பெரியவரே மன்னிக்க வேண்டும் எங்கள் வர்த்தக ஸ்தாபனத்தில் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுப்பதை நிறுத்தி விட்டோம். வேறு ஸ்தாபனங்களைப் பாருங்கள் என்றுகூறி அனுப்பிவைத்தேன்''.



திரு. ஆர். விஜயபாலன்

## பெரியவரின் விடாமுயற்சி

பெரியவர் விடுவதாயில்லை. தொடர்ந்து இரண்டு மூன்று தடவைகள் வந்துபோனார். இதென்னடா பெரியவர் விடாக்கண்டனாக இருக்கிறாரே அடுத்த தடவை வரும்போது 'கட் அண்ட் டிரை' யாக சொல்லி இங்கு வருவதை நிறுத்திவிட வேண்டும் என்ற முடிவோடு இருந்தேன்.

மறுதினமே அந்தப் பெரியவர் மீண்டும் என்முன் காட்சியளித்தார் ''சார், சார். என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். இங்கு அடிக்கடி வந்து உங்களை உபத்திரவப்படுத்துவதற்கு உண்மையிலே வருந்துகிறேன். இந்த சஞ்சிகையை பணம் சம்பாதிக்கும் நோக்கத்தோடு நாங்கள் நடத்தவில்லை. இந்து சமயத்திற்கும், இந்து மக்களுக்கும் சிறு தொண்டாவது செய்ய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தோடு தான் சஞ்சிகையை நடத்துகிறோம் இந்த நல்லநோக்கத்திற்கு நீங்கள் நிச்சயம் உதவி செய்வீர்கள் என்ற நம்பிக்கையோடு தான் அடிக்கடி இங்கு வந்து போகிறேன் என்று 'ஒரு லெக்சரை' அடித்துவிட்டார்.

## பிடித்தமான சஞ்சிகை

நான் கதையை வளர்க்க விரும்பவில்லை ''பெரியவரே, இப்போது நான் பிஸியாக இருக்கிறேன். இன்னும் இரண்டு வாரங்கள் கழித்து வாருங்கள்' யோசிப்போம்'' என்று கூறி அனுப்பிவைத்தேன் பெரியவர் சென்றபின்னர் தான் இந்து கலாசாரம் சஞ்சிகையை முழுமையாக புரட்டிப் பார்த்தேன் உண்மையிலேயே என் மனதுக்கு பிடித்தமான அரிய விசயங்கள் காணப்பட்டன. இத்தனை நாளும் இச் சஞ்சிகையை கவனியாதது ஒரு குறையாக தென்பட்டது. அதோடு ஆசிரியர் குழுவைச்சேர்ந்த பெரியவர் தன் முதிய வயதிலும் தன நிலையைப் பொருட்படுத்தாது இச் சஞ்சிகைக்காக அலைவதை பார்க்கும்போது அவர் மீதும் எனக்கு அனுதாபம் ஏற்பட்டது.

சரியாக இரண்டு வாரங்கள் கழிந்ததும் பெரியவர் மீண்டும் என் முன் ஆஜரானார்.

## உள்ளமும் உவகையும்

வந்தவரை உட்காரச் சொல்லி ஒரு கப் காப்பியும் கொடுத்து விசயத்தை விளக்கினேன்: ''உங்கள் சஞ்சிகையில் ஏராளமான நல்ல விசயங்கள் இருக்கின்றன. சிலவைபின்னப்பட்டு சிதைந்து கிடக்கும் இந்து சமயத்திற்கும் இந்து கலாசாரத்துக்கும் புத்துயிர் ஊட்டும் கட்டுரைகள் கவிதைகள் ஆலய வரலாறுகள் இன்னோரன்ன பல நல்ல அம்சங்கள் உள்ளன. அதோடு வீட்டில் இருந்து சுகமாக பொழுது போக்க வேண்டிய நீங்கள் இப்படி தோல்பையையும் தூக்கிக் கொண்டு நடையாய் நடப்பதை பார்க்கும் போது எனக்கு உங்கள் மீது அனுதாபமும் ஏற்படுகிறது. இனி நீங்கள் இங்குவந்து அலைய வேண்டாம் சஞ்சிகைக்கு விளம்பரம் கொடுக்கும் நோக்கம் இல்லை. ஆனால் மாதா மாதம் நான் ஒரு சிறு தொகை என் அன்பளிப்பாக கொடுத்து வருகிறேன். இந்த அன்பளிப்பு உங்கள் வீடு தேடிவரும் என்றேன்

பெரியவர் மேலும் கீழும் விழித்தார். ஆச்சரியத்தில் மூழ்கியவராக காணப்பட்டார். பெரியவரே ஆச்சரியப்படாதீர்கள் உண்மையாகவே கூறுகிறேன். இந்த அன்பளிப்பு மாதா மாதம் உங்கள் வீடு தேடிவரும். போய்வாருங்கள் என்று கூறினேன். பெரியவர் மகிழ்ச்சியோடு ஒரு கும்பிடு போட்டுவிட்டு கிளம்பினார்.

இதையெல்லாம் ஏன் இங்கு கூறுகிறேன் என்றால்

(33 ஆம் பக்கம் பார்க்க)

*With Best Compliments From*

★

# *Shan Enterprise*

**Dealers in: Watches, Clocks.
Radios T V. and
Fancy Goods Etc**

Telephone: 25106

SHOP NO. 5. 2ND FLOOR,
A. S. MOHAMED BUILDING
91, SECOND CROSS STREET,
COLOMBO-11

**WITH THE BEST COMPLIMENTS**

# E.G.S COMMISSION AGENT

23135

120. FORTH CROSS STREET,
COLOMBO - 11.

With Best Compliments

of

A WELL WISHER

உ
சிவமயம்

WITH BEST COMPLIMENTS FROM

★

" மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம் "

★

Peoples Trades & SupplieRS
112, 4TH CROSS STREET, COLOMBO - 11.

# இந்து கலாசா . . . . . .

(28-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சஞ்சிகைக்கும் எனக்கும் எப்படி தொடர்பு ஏற்பட்டது என்பதை விளக்கவே.

வடக்கு— கிழக்கு — மலையகத்தில் இன்று நடந்து கொண்டிருக்கும் மத மாற்றங்கள் இந்து சமயத்திற்கே பெரிய சவாலாக மாறியுள்ளது. மதம் மாற்றுபவர்களை வெறுமனே குறை கூறிக் கொண்டிருப்பதில் பயனில்லை. காரணங்கள் ஆராயப்பட்டு தகுந்த பரிகாரம் காணப்படவேண்டியது இந்துக்கள் முன்னுள்ள ஒரு முக்கிய பிரச்சினை. மத மாற்ற கெடுபிடியை உடனே நிறுத்து! என இச் சஞ்சிகை சங்கநாதம் புரிகிறது.

1983 கலவரத்துக்குப் பின் இந்துக்களிடையேயான சகல அம்சங்களும் தேக்க நிலை அடைந்துள்ளதை யாரும் மறுக்கமுடியாது. இத் தேக்க நிலையைப் போக்க இந்து மக்களினதும் அவர்கள் சார்ந்துள்ள மத பீடங்களினதும் பொறுப்பு மிக முக்கியமானது.

இந்து சமயத்திற்கு ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவன அமைப்பு தேவை என்பதை இச் சஞ்சிகை ஆரம்ப முதல் வலியுறுத்தி வந்துள்ளதை அவதானிக்கிறேன்.

இலங்கையில் இருபத்தேழு இலட்சம் இந்துப் பெருங்குடிமக்கள் வாழ்ந்த போதிலும் இவர்களுக்கென தலைநகரில் ஒரு இந்து கலாசார நிலையம் இல்லாத குறையை இச் சஞ்சிகை அடிக்கடி வற்புறுத்தி வந்திருக்கிறது.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் குருமகா சந்நிதானம் அவர்களுக்கு கொழும்பில் ஒரு மடம் எழுப்பி அரசாங்க ரீதியில் நமது நாட்டிலே சகல மத குருமார்களுக்கும் கிடைக்கப் பெற்றுள்ள அங்கீகாரங்கள் இந்து குருமகா சந்நிதானத்துக்கும் கிடைக்க வேண்டுமென இச் சஞ்சிகை போராடி வருகிறது.

1983 கலவரத்தின்போது சேதமுற்ற இந்து ஆலயங்கள் பல இன்னும் புனருத்தாரணம் செய்யப்படாமலே இருப்பதை இச் சஞ்சிகை புகைப்படங்களுடன் அம்பலத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது.

இச் சஞ்சிகை ஆரம்பித்து ஓராண்டு காலத்துள் இந்து சமய மறுமலர்ச்சிக்கு கணிசமான அளவு பங்களிப்பு செய்துள்ளதை அவதானிக்கிறேன். இந்த ஒரே நோக்கத்திற்காகவே இச் சஞ்சிகையை ஆதரிக்கிறேன். இந்துப் பெருங்குடி மக்கள் அனைவரும் இச் சஞ்சிகையை ஆதரிக்க வேண்டுமென தாழ்மையாக கேட்டுக் கொள்கிறேன்.

## "பண்ணும் பதமும்"

கொ/ விவேகானந்த சபையினர் இந்துசமய கலாசார தமிழ் விவகார அமைச்சின் அனுசரணையுடன் எதிர்வரும் மார்ச் இறுதி வாரத்தில் "பண்ணும் பதமும்" என்ற தலைப்பில் மூன்று நாள் விழா ஒன்றை ஒழுங்கு செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

அகில இலங்கை ரீதியில் நடைபெறும் இவ் விழாவின் இலங்கை வாழ் இசை நடனக் கலைஞர்கள் பங்கு கொள்வார்கள், முற்பகல் இடம் பெறும் கருத்தரங்கில் பல அறிஞர்கள் பங்கு கொள்வதுடன் ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பிப்பார்கள்.

இந்து கலாசாரம்

இந்து சமய

திங்கள் இதழ்

சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ 30.00 |
| ஆறு மாதம் | ரூ 15.00 |
| மூன்று மாதம் | ரூ. 7.00 |
| தனிப் பிரதி | ரூ. 2.00 |

விபரங்களுக்கு:—

நிர்வாகி,


இந்து கலாசாரம்;
39/23, நெல்சன்
ஒழுங்கை கொழும்பு-3

லண்டனில் இந்து கலாசாரம் கிடைக்குமிடம்:

No. 11 DURLEY AVENUE
PINNER MIDDSEX
HAS I. J. O.
UNITED KINGDOM

## சைவக் கற்பனைகள்

திருநீறு பூசிச் சிவனை மறவாதிருத்தல்
திருமுறைகளைப் பாடமாகப் பண்ணோடு படித்தல்
சட்டாயமாக சிவதீட்சை பெற்றுக்கொள்ளல்
வேதங்களை சிவாகமங்களைப் போற்றுதல்.
பிராமணர்களுக்கு மதிப்புக் கொடுத்தல்.
திருக்கோயிலுக்கு ஒழுங்காகச் செல்லல்.
தாய், தந்தை குரு இவர்களை வணங்குதல்.
தமிழ் மொழியை விரும்பிப் படித்தல்.
சைவசமயத்தைக் காப்பாற்றிக் கொள்ளல்.
மச்சம், மாமிசம், மது உணாதிருத்தல்.
சத்தியத்தையும் தருமத்தையும் மறவாதிருத்தல்.
உத்தமன் எனப் பெயர்பெற வாழுதல்.



*With the Compliments*

*of*

★

**Bobby JEWELLERS**

ORDERS EXECUTED PROMPTLY
BUYERS, SELLERS OF GOLD &
SILVER JEWELLERIS

***159, Sea Street, Colombo 11***
PHONE: 549682

With Best Compliments

From

# M/s GHANNA TYRE HOUSE

48, KANDASAMY KOVIL ROAD

**VAVUNIYA.**

FOR

SOLE DISTRIBUTER KELANY TYERS.


இப்பத்திரிகை கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றத்திற்காக கொள்ளுப்பிட்டி நெல்சன் ஒழுங்கை 39/23 இலக்க இல்லத்தில் வசிக்கும் ஏ. எம். துரைசாமி என்பவரால், கொழும்பு விவேகானந்த மேடு 98 ஆம் இலக்கத்திலுள்ள சங்கர் சன்ஸ் பிறிண்டேர்சில் 14 - 1 - 1990 ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.